# CHANDRAHARI

A TAMIL DRAMA

BY

**Rao Saheb P. SAMBANDAM,** B. A., B. L.,

Author of:
"Lilavathi-Sulochana," "Manohara," "Siruthondar," "Sabapathy," "Blind Ambition," "The Two Friends," "Fate and Love" "Sarangadhara," "Simhalanatha," "Pushpavalli," "Amaladitya," "Magapathi," "Farces," "Galava." "The Golden Fetters," "The Demon Land," "The Bandit Chief," "Markandeya," "The Fair Ghost," "The Merchant of Vanipura," "The Wedding of Valli," "The Eye of Love," "Vijayarangam," "As you like it," "Ratnavali," "Lord Buddha," "The Tragedy of Silence," "The Good Fairy," "Geetha Manjari," "Harischandra," "As We Sow-So We Reap," "The Curse of Oorvasi," "True Love," "The Pongal Feast" etc. in Tamil, and "Harischandra," and "Yayathi" in English.

*FIRST EDITION*

Madras:
PRINTED BY DOWDEN AND CO., AT THE "PEERLESS PRESS,"
21, Sunkurama Chetty Street.

1923.

*All Rights reserved.)* (Price per Copy

உ

# சந்திரஹரி

இந்த தமிழ் நாடகம்

ராவ் சாஹேப்

**ப. சம்பந்த முதலியார்,** பி-ஏ., பி-எல்.,

அவர்களால் இயற்றப்பட்டது.

(இந்த நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்ற நூல்கள்:—
"லீலாவதி-சுலோசனை," "கள்வர் தலைவன்," "மனோஹரன்,"
"இரண்டு நண்பர்கள்," "சாரங்கதரன்," "நற்குல தெய்வம்,"
"சத்ருஜித்," "யயாதி," "மார்க்கண்டேயர்," "விஜயரங்கம்,"
"காதலர் கண்கள்," "பேயல்ல-பெண்மணியே," "மகபதி,"
"மெய்க்காதல்," "பொன் விலங்குகள்," "சிம்ஹளநாதன்,"
"விரும்பிய விதமே," "சிறுத்தொண்டர்," "வேதாள உலகம்,"
"வாணீபுர வணிகன்," "ரஜபுத்ரவீரன்," "ஹரிச்சந்திரன்,"
"ரத்னவளி," "புஷ்பவல்லி," "கீதமஞ்சரி," "புத்த அவதாரம்,"
"பிரஹசனங்கள்," "ஊர்வசியின் சாபம்," "அமலாதித்யன்,"
"முற்பகற் செய்யின் பிற்பகல் விளையும்," "வள்ளி மணம்,"
"சபாபதி," "காலவரிஷி," "பொங்கல் பண்டிகை" முதலியன.)

முதல் பதிப்பு

சென்னை:

டௌடன் கம்பெனியாரின்

"பியர்லெஸ்" அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

காபி ரைட்.]

INSCRIBED

TO

THE BELOVED MEMORY OF

**MY PARENTS**

P. VIJIARANGA MUDALIAR,

and

P. MANICKAVELU AMMAL

and

**MY FRIEND**

C. RANGAVADIVELU

# PREFACE

This is a Burlesque; I think this is the first of its kind in Tamil. A Burlesque has been defined to be "an ironical or satirical composition intended to excite laughter."

I do not think that anything of this type is to be found in Sanscrit Dramaturgy. Probably this is peculiar to the Western drama. My object being to give a specimen of every kind of Western drama in the Tamil language, I have attempted this. This is a Burlesque of Harischandra; therein the Hero is one who never speaks a falsehood in the most trying ordeals, herein the Hero is one who never utters a truth under the most trying circumstances even! To give greater piquancy to the plot, I have inverted all the names, Harischandra becoming Chandrahari and so on.

"PAMMAL LODGE"
MADRAS
20th Dec. 1923.

THE AUTHOR.

---

**N. B.**—All concerned will kindly note that my previous permission is necessary to stage this or any other drama of mine.

# நாடக பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| பரமசிவம் | ... ... | ஜகதீசன் |
| சந்திரஹரி | ... ... | மறவநாட்டு மன்னன் |
| தாசதேவன் | ... ... | சந்திரஹரியின் பிள்ளை |
| அசத்தியகீர்த்தி | ... ... | சந்திரஹரியின் மந்திரி |
| சிஷ்டவாசி<br>மித்ரவசு | ... ... | இரண்டு ரிஷிகள் |
| ஈசநட்சத்திரன் | ... ... | சிஷ்டவாசியின் சிஷ்யன் |
| கண்டகாலன் | ... ... | ஓர் பிராம்மணன் |
| யமதர்மன் | ... ... | தென்திசைக் கடவுள் |
| பாஹு—வீரன் | ... ... | ஓர் புலையன் |
| மதிசந்திரை | ... ... | சந்திரஹரியின் மனைவி |
| கண்டிகாலி | ... ... | கண்டகாலன் மனைவி |

பேய்கள், வாயிற் காப்போர், ரிஷிப்பெண்கள்,
நகர் காவலாளிகள் முதலியோர்.

இடம்—தெற்கு நாடு.

காலம்—கலியுக ஆரம்பம்.

# சந்திரஹரி

## மூற்கூறு

இடம்—யமதர்மலோகம். யமனுடைய கொலு.

யமதர்மன் சிம்ஹாசனத்தில் வீற்றிருக்க, சித்ரகுப்தன் ஒருபுறமும் சிஷ்டவாசி ஒருபுறமும் உட்கார்ந்திருக்கின்றனர்.

பேய்கள் கொக்கரித்துக் கூத்தாடுகின்றன.

யமபடர்கள் இருபுறமும் சூழ்ந்திருக்கின்றனர்.

வாயிற் காப்போன். பராக்! யமதர்மராஜனே! தங்களைப் பார்ப்பதற்காக மித்ரவசு என்னும் ரிஷி வருகிறார்.

ய. உடனே அழைத்துவா உள்ளே.

வாயிற்காப்போன் வெளியே போய் மித்ரவசுவை அழைத்துக்கொண்டு வருகிறான்.

வரவேண்டும்! வரவேண்டும்! மஹாரிஷி தன்யனானேன்! இந்த ஆசனத்தில் வீற்றிருக்கவேண்டும்.

மி. [உட்கார்ந்து] யமதர்மனே, க்ஷேமந்தானா?

ய. தங்களைப்போன்ற பெரியோர்களுடைய அனுக்கிரகத்தினால் எல்லாம் க்ஷேமந்தான்—தங்களைப் பார்த்து நெடுநாளாயிற்று.—இதுவரையில் எங்கு சென்றிருந்தீர்கள்? என்ன விசேஷம்? தெரிவிக்கவேண்டும்.

மி. நடுவனே, நான் கொஞ்ச நாளாக பூலோக சஞ்சாரம் செய்து வந்தேன். அங்கு ஓர் புதுமையைக் கண்டேன். அதை உன்னிடம் கூறவேண்டுமென்று இங்கு வந்தேன்

ய. ஆஹா! மஹத் சந்தோஷம். அது என்ன புதுமையோ அதை அறிய ஆவல்கொண் டிருக்கிறேன்.

மீ. கேளாய், யமதர்மனே, பூலோகத்தில் கன்யாகுமரியில் துடங்கி, ஒவ்வொரு தேசமாய்ப் பார்த்துக்கொண்டு வரும்பொழுது, மறவநாட்டில் சந்திரஹரி என்னும் ஓர் அரசன் இருப்பதாயும் அவனைப்போன்ற அசத்தியவான் பூலோகத்தில் ஒருவனும் கிடைக்கமாட்டான் என்றும் கேள்விப்பட்டு, அவனது நாட்டிற்குப் போய் சிலகாலம் தங்கியிருந்து, அவனது குணாதிசயங்களை நேரிற் கண்டு வந்தேன். ஆஹா! அவற்றை நான் என்னென்றுரைப்பேன்! அவனைப்போன்ற அசத்தியவான் இத் திரிலோகங்களிலுமே கிடையாதென்று கூறவேண்டும். அசத்தியம் பேசுவதையே அவன் விரதமாகக் கொண்டிருக்கிறான். மறந்தும் அவன் வாயினின்றும் சத்யமொழி வருவதில்லை, மது வெறியிலும் வருவதில்லை, மற்றும் கனவிலும் வருவதில்லை. அன்றியும், அவன் குணாதிசயங்களைப்பற்றி அதிகமாய்க் கூறுவானேன்? இந்த பிரம்ம சிருஷ்டியில் என்னென்ன பாபகுணங்களுண்டோ, அவைகளெல்லாம் அவனிடம் குடிகொண்டிருக்கின்றன.

சி. அப்படிப்பட்டவன் இப் பிரபஞ்சத்தில் ஒருவனுமிருக்கமாட்டான் என்று எண்ணுகிறேன்.

மீ. [திரும்பிப் பார்த்து] ஆஹா! என் வார்த்தையை வெட்டிப் பேசியது யார்? ஓ! சிஷ்டவாசி! தாங்களா? முன்பொரு முறை இவனுடன் சபதம் போட்டு ஜெயித்துவிட்டோம் என்ற கர்வத்தினால் இவ்வாறு கூறுகின்றீரா? இப்பொழுது இவ் விஷயத்தில் என்னுடன் சபதம் போடுவீரா?

சி. ஆஹா! அப்படியே செய்யத் தடையில்லை. அந்த சந்திரஹரி என்னும் அரசன் வாயினின்றும் ஒரு சத்யமொழி வரவழைக்காவிட்டால் என் பெயரை மாற்றி உமது பெயரை நான் பூணுகிறேன்.

மீ. சபாஷ்! அங்ஙனம் நீர் செய்வீராயின் என் பெயரை மாற்றி உமது பெயரை நான் பூணுகிறேன்.

ய. முனிவர்களே! பெயரை மாற்றிக்கொள்வது ஒரு பெரிய காரியமாகாதே! எனக்கொரு யோசனை தோற்றுகிறது. ஆகவே தோற்றவர்கள் இன்னும் ஏதாவது கடினமான தண்டனைக்குட்படவேண்டும் என்றும் சபதம் செய்தால் பொருந்தியதா யிருக்கும்.

மி. சரி யானால்! சிஷ்டவாசி! இதில் நீர் தோற்றுப்போனால் நீர் செய்த புண்யத்தில் பாதி நீர் அவனுக்குக் கொடுத்து விடவேண்டும்.

சி. சரி அப்படியே ஒப்புக்கொண்டேன். நீர் தோற்றுப் போனால் கபாலமொன்றைக் கையி லேந்தி கழுதை யொன்றை முதுகில் தூக்கிக்கொண்டு மும்முறை இம் மூன்று லோகங்களையும் சுற்றி வரவேண்டும்.

மி. சரி அப்படியே ஆகட்டும் புறப்படும் உடனே. உம் முடைய சாமர்த்தியத்தைப் பார்ப்போம்.

சி. இதோ புறப்பட்டு விட்டேன், யமதர்மராஜனே, நான் விடை பெற்றுக்கொள்ளுகிறேன்.

ய. ஞாபக மிருக்கவேண்டும். [சிஷ்டவாசி போகிறார்.]

முற்கூறு முடிகிறது.

# முதல் அங்கம்

## முதல் காட்சி

இடம்—ஓர் வெளி நிலம்.

சிஷ்டவாசி வருகிறார்.

சி. நான் எடுத்துக்கொண்ட வேலை—என்ன—கஷ்டமாய் முடியும்போ லிருக்கிறதே! பூலோகத்தில் யாரை விசாரித்த போதிலும் இந்த அரசனைப்பற்றி அப்படியே கூறுகிறார்கள். இதற் கென்ன செய்வது? வாயை சும்மா மூடிக்

கொண்டிராது வலுவில் ஒரு சபதம் செய்துவிட்டோம். எப்படியும் அதை நிறைவேற்றியே தீரவேண்டும்—பார்ப்போம். உலகத்தில் எப்பொழுதும் சத்யமே பேசுவது மிகவும் கஷ்டம்தான். ஆயினும் எப்பொழுதும் அசத்தியமே பேசுவது அதிலும் கஷ்டமென எனக்குத் தோன்றுகிறது. வாய் தவறியாவது இவன் ஒரு உண்மையான மொழி பேசாமலிருக்கப்போகிறனே பார்ப்போம். அன்றியும் துவாபர யுகத்தில் தர்மராஜன் எப்படிப்பட்ட கெட்ட மனிதனை யிருந்தபோதிலும் அவனிடம் ஒரு நற் குணமாவது இராமற் போகாது என்று கூறி யிருக்கின்றார் அல்லவா? என்னதான் கலியுகமா யிருந்தபோதிலும் இந்த சந்திரஹரியிடம் ஒரு நற்குணமாவது ஒளித்திராதா ஆராய்ந்து பார்ப்போம். ஆம்—இதுவே நல்ல யுக்தி—இவனிடம் நேராகச் சென்று யாகத்திற்கென்று பொருள் யாசித்துப் பார்ப்போம். [போகிறார்.]

காட்சி முடிகிறது.

## இரண்டாம் காட்சி

இடம்—சந்திரஹரியின் கொலு மண்டபம்.

சந்திரஹரி சிம்மாசனத்தில் வீற்றிருக்கின்றான்.

மந்திரி அசத்தியகீர்த்தி எதிரில் நிற்கிறான்.

ச. மந்திரி, பாண்டிய நாட்டிற்கு நாம் அனுப்பிய நமது பிரஜைகள், பாண்டியனுடைய பொக்கசத்திலிருந்தும் மற்ற இடங்களிலிருந்தும் நாம் குறிப்பிட்ட பொருள்களை யெல்லாம் திருடிக்கொண்டு வந்தார்களா சரியாக?

அ. எல்லாப் பொருள்களும் சரியாக வந்து சேர்ந்தன. பாண்டியனுடைய கைக் குழந்தையின் கை வளையல் ஒன்று மாத்திரம் வந்தது. இரண்டையும் கவர்ந்து வரும்படியாக அனுப்பப்பட்டவன், மற்றொன்றைக் கழற்றும் பொழுது அக் குழந்தை நகைத்தது, அதைக் கண்டு பரி

தாபப்பட்டு ஒன்றுடன் வந்துவிட்டேன், என்று கூறுகிறுன்.

ச. படுக்காளிக் கழுதை! அவன் நமது பிரஜையாக இருக்கத் தக்கவனல்லன். இன்னொரு முறை அப்படிச் செய்வாஞயின் சிரச்சேதம் செய்துவிடுவேன் என்று சொல். முதல் முறை யானபடியினுல் ஆறு மாதம் சிறைக் காவலுடன் விட்டேனென்று தெரிவி.

அ. சித்தம்.

ச. நமது பொக்கசம் எப்படி யிருக்கிறது ?

அ. அது பூரணமாக நிறைந்துவிட்டபடியால், இனி வரும் பொருள்களை வைப்பதற்காக புதிதாய் இன்னென்று கட்டும்படியாக உத்தரவு கொடுத்திருக்கிறேன்.

ச. மிகவும் சந்தோஷம்—

வாயிற் காப்போன் வருகிருன்.

வா. மஹாப்பிரபு! தம்மைக் காணவேண்டுமென்று யாரோ ஒரு ரிஷி வந்திருக்கிருர்.

ச. சீ! இந்த தாடி ரிஷிகளெல்லாம் ஏதாவது நம்மிடமிருந்து தட்டிக்கொண்டு போகத்தான் வருவார்கள்.— நான் இங்கு இல்லை யென்று சொல்லிவிடு போ.

[வாயிற் காப்போன் போகிருன்.]

சிக்ஷ்டவாசி வருகிருர்.

சி. ஹே ராஜன்! நான் வரலாமோ?

ச. ஆஹாஹா! வரவேணும் வரவேணும்! இப்பொழுதுதான் வாயில் காப்போன் தெரிவித்தான். தங்களை உடனே என் அழைத்து வரவில்லையென்று அவன்மீது கோபித்துக்கொண் டிருந்தேன்—மன்னிக்க வேண்டும். உட்காரவேண்டும்— தாங்கள் வந்தது இந் நாடும் என் முன்னேர்களும் செய்த பூஜா பலனேயாம்—என்ன விசேஷம்.

சி. க்ஷேமம்தானு ?

ச. மஹரிஷி, உங்களிடத்தில் என் குறையைக் கூறுது மற்று யாரிடம் கூறப்போகிறேன். தற்காலம் இந் நாட்டில் மிகுந்த க்ஷாமமா யிருக்கிறது.

சி. அப்படியா? நான் விசாரித்த அளவில் இவ் வருஷம் இந் நாட்டில் எல்லாம் சுபிக்ஷம் என்றார்களே.

ச. அதற்கு உங்களுக்கு அர்த்தம் தெரியாது. எல்லோரும் நன்றாக பிட்சை யெடுக்க வேண்டியதுதான் இவ் வருஷம் என்று அர்த்தம்—அதிருக்கட்டும். தாங்கள் வந்த காரணம் என்னவோ?

சி. தாங்கள்தானே சந்திரஹரி என்னும் அரசன்?

ச. அடடா! சந்திரஹரி யென்று என்னை நினைத்துக்கொண்டீர்! அவர் இறந்து எத்தனை வருஷங்களாகின்றன!—

சி. தாங்கள் யாரோ?

ச. அவருடைய பேரன் நான்.

சி. சந்தோஷம்—நான் ஒரு யாகம் செய்யவேண்டுமென்று உத்தேசித்திருக்கிறேன், அதற்குக் கொஞ்சம் பொருள் தேவையா யிருக்கிறது—

ச. ஐயோ! என்ன கஷ்டம்! இந்த சமயத்தில் வந்தீர்களே! க்ஷாம காலம்—உங்களுக்குக் கொடுப்பதற்கோ கையில் ஒன்று மில்லை—என்ன தர்ம சங்கடம்?

சி. எனக்கு அதிகமாக வேண்டியதில்லை. அந்த யாகத்திற்குப் பதினாயிரம் பொன் பிடிக்கும். மற்ற இடங்களில் ஒன்பதினாயிரம் சேகரித்திருக்கிறேன்—மிகுதி ஆயிரம் பொன்தான் வேண்டி யிருக்கிறது.

ச. ஐயோ! என்ன சங்கடம்! ஆயிரம் காசும் என்னிட மில்லையே இப்பொழுது! மந்திரி, நமது பொக்கசத்தில் ஏதாவதிருக்கிறதா?

அ. ஒரு காசும் கிடையாது! எல்லாம் துடைத்துவைத்திருக்கின்றதே! நேற்று நமது ஆலயத்தில் விநாயகர் உற்சவத்திற்குக்கூட காசு கிடையாதென்று நிறுத்திவிட்டோமே!

ச. பார்த்தீர்களா? நிரம்ப வருத்தமாயிருக்கிறது. இன்னொரு சமயம்—சரியான சமயமாகப் பார்த்து வாருங்கள்—இனி விடை பெற்றுக்கொள்ளலாமே?

சி. என் தூர் அதிர்ஷ்டம்!—நான் புறப்படுகிறேன்—ஆயினும் ஒரு வேண்டுகோள்.

ச. என்ன? சீக்கிரம் சொல்லும்-எனக்கு வேலையிருக்கின்றது.

சி. வேறு எங்கேயாவது போய் அந்த ஆயிரம் பொன்னையும் சேகரிக்குமளவும் என்னிடமிருக்கிற இந்த ஒன்பதினாயிரம் பொன்னையும் இங்கே அடைக்கலமாக வைத்துப் போகிறேன். நான் திரும்பி வருமளவும் அதைப் பாதுகாத்துக் கொடுக்கவேண்டும்.

ச. மிகவும் சந்தோஷம் அப்படியே. மந்திரி, உடனே மகரிஷியின் பொருளை வாங்கி, பொக்கசத்தில் ஜாக்கிரதையாக வேறாக வை.

அ. [பண மூட்டையை அவரிடமிருந்து வாங்கிக்கொண்டு] அப்படியே மிகவும் ஜாக்கிரதையாக வைக்கிறேன்.

சி. நான் விடை பெற்றுக்கொள்ளுகிறேன்.

ச. ஆஹா அப்படியே!—அவ்விடத்திய ஞாபகம் இங்கே இருக்கவேண்டும். [வணங்குகிறான்; சிஷ்டவாசி போகிறார்.]

ச. மந்திரி வாயிலைக் கடந்துவிட்டதா அந்த பயித்தியம்?

அ. கடந்துவிட்டது.

ச. சரி!—நம்முடைய அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்! பாண்டிய தேசத்திலிருந்து களவாடிக் கொண்டுவந்த நமது பிரஜைகள் ஒவ்வொருவனுக்கும் இதில் நூறு பொன் விகிதம் கொடுத்துவிட்டு, மிகுதியை நமது பொக்கசத்தில் சேர்த்துவிடு உடனே.—சீக்கிரம், நாளைக்கே இந்த தாடி திரும்பி வந்தாலும் வந்துவிடும் ஒரு வேளை.

அ. அப்படியே மஹாராஜா!

[பணப் பையை எடுத்துக்கொண்டு போகிறான்.]

காட்சி முடிகிறது.

## மூன்றாம் காட்சி

இடம்—சிஷ்டவாசியின் ஆஸ்ரமத் தருகில் ஓர் பிரதேசம்.

சிஷ்டவாசி உலாவிக்கொண்டிருக்கிறார்.

சி. என்ன ஆச்சரியம்! இக் கலி யுகத்திலும் இப்படிப்பட்ட மனிதன் ஒருவன் இருப்பான் என்று நான் நினைக்கவில்லை அவன் கூறிய மொழிகளனைத்தும் பொய் என்று நான் நன்றா யறிந்திருந்தும் அச் சமயம் அவைகளை நம்பும்படிச் செய்தனனே! தன் பெயரைப் பற்றியே பொய் யுரைத்தனனே! உயிரோடிருக்கும்பொழுதே வாய் கூசாது இறந்துவிட்டதாகக் கூறினனே! இப்படிப்பட்டவன் வாயினின்றும் ஒரு உண்மையை வருவிப்பதெப்படி! நான் கொடுத்த பொன்னைத் திருப்பிக் கொடுப்பான் என்று நான் எள்ளளவும் நம்பவில்லை,—ஆயினும் ஒரு காரியத்தில் பிரவேசித்தபின் பின்வாங்கலாகாது. நம்மா லியன்ற அளவு முயன்று பார்ப்போம். "தெய்வத்தா லாகா தெனினும் முயற்சி மெய் வருத்தக் கூலி தரும்" என்று ஆன்றோர் கூறியபடி, நாம் அதன் பலனை அடையாமற் போகமாட்டோம்.— இவனுக்கு ராஜ்ய பலம் இருப்பதனால் இவ்வளவு துர்க்குணங்களுக்கும் இடம் கொடுக்கின்றது என்று எண்ணுகிறேன். ஆகவே இவனது ராஜ்யத்தைவிட்டு இவனை அகற்றவேண்டும் தக்க சூழ்ச்சியினால். அப்பொழுதாவது நல் வழிக்குத் திரும்புகிறானோ பார்ப்போம்.--ஆம், அதுதான் நல்ல யோசனை; எனது தபோ பலத்தினால் சில மிருகங்களைச் சிருஷ்டித்து, அவைகளை வேட்டையாடவேண்டிய காரணத்தினால், இவனை நமது ஆஸ்ரமத்துக் கருகில் வலிப்போம் முதலில். [போகிறார்.]

காட்சி முடிகிறது.

## நான்காம் காட்சி

இடம்—சிஷ்டவாசியின் ஆஸ்ரமம்.

சந்திரஹரியும் அசத்தியகீர்த்தியும் வருகிறார்கள்.

ச. மந்திரி, இது ஒரு ஆஸ்ரமம்போல் தோற்றுகிறது, இங்கு சற்று தங்கி இளைப்பாறிப் போவோம்.—என்ன ஆச்சரியம்! மற்ற மிருகங்களை யெல்லாம் எளிதில் கொன்றோம். இந்த ஒரு அற்பப் பசு நம்மை ஏமாற்றி, நம்முடைய கையிலிருந்து தப்பியதுமன்றி, நம்மை இவ்வளவு தூரம் இழுத்துக்கொண்டு வந்துவிட்டது!

அ. ஆம், எனக்கும் ஆச்சரியமாகத்தா னிருக்கிறது—இவ்விடத்தில்தான் நுழைந்ததைக் கண்டேன். இங்கு எங்கும் காணோம்.—என்ன மாயமா யிருக்கிறது!

ச. இங்குதான் எங்காவது ஒளிந்திருக்கும். எங்கே யிருக்கிறதென்று மெல்ல தெரிந்து வா. எப்படியாவது அதை நாம் கவர்ந்து செல்லவேண்டும். நன்றாகக் கொழுத்திருந்தது, அதன் தசை மிகவும் ருசியா யிருக்கவேண்டும்.

அ. இதோ போய்த் தேடி வருகிறேன். [போகிறான்.]

ச. நம்முடைய நாட்டெல்லையில் இந்த ஆஸ்ரமம் எங்கிருந்து வந்தது? மிகுந்திருந்த ஆஸ்ரமங்களை யெல்லாம், இந்த தாடி ரிஷிகள் அடிக்கடி யாசகத்திற்கு வருகிறார்களென்று, தீயிட்டுக் கொளுத்திவிட்டோமே, இது மாத்திரம் எப்படித் தப்பியது?—அதோ! யாரோ வருகிறாற்போ லிருக்கிறது.— இரண்டு பெண்கள்!—என்ன அழகிகள்!—இவர்கள் என்ன செய்கிறார்கள் என்று மறைந்திருந்து பார்ப்போம். [மறைந்து கொள்கிறான்.]

இரண்டு ரிஷிப் பெண்கள் வருகின்றனர்.

மு-பெ. அக்காள், சீக்கிரம் வருகின்றேன் என்று சென்ற நமது தந்தை ஏன் இன்னும் வந்திலர்?

இ-பெ. அவரைப்பற்றி நமக்குக் கவலையே வேண்டாம், எப்படியும் சீக்கிரம் திரும்பி வருவார்.

மு-பெ. என்ன வேலையாகப் போயிருக்கிறார் தெரியுமா உனக்கு? நான் கேட்டபோது அது ஒரு ரகஸ்யம் என்று சொல்லிப் போனார்.

இ-பெ. ரகஸ்யம் வேறென்ன இருக்கப்போகிறது நமக்குத் தக்க வரனைத் தேடிப் பார்ப்பதற்காகத்தா னிருக்குமென்று நினைக்கிறேன்.

மு-பெ. போ அக்காள் விளையாடுகிறாய்— இதற்குள் நமக்கென்னத்திற்கு விவாஹம்?— அக்காள், தந்தை வருமளவும் ஏதாவது பாடி வேடிக்கையாய்ப் பொழுது போக்குவோம். [இருவரும் பக்திரசமமைந்த ஒரு பாட்டைப் பாடுகின்றனர்.]

அக்காள், இன்னும் தந்தை வரவில்லையே, அவருக்கு ஏதாவது தீங்கிழைத்தார்களோ என்னமோ இங்குள்ள வனவாசிகள்?

இ-பெ. அப்படி ஒன்றும் இராது. சிஷ்டவாசியின் தபோபலம் இங்குள்ளவர்க ளெல்லாம் நன்று யறிந்திருக்கிறார்கள். அவருக்குத் தீங்கிழைக்க ஒருவரும் கனவிலும் எண்ண மாட்டார்கள்—நாம் பர்ணசாலைக்குப் போவோம் வா. [இருவரும் போகப் புறப்படுகின்றனர்.]

சந்திரஹரி மறைவிடமிருந்து வெளி வருகிறான்.

ச. பெண்காள், சிஷ்டவாசியின் ஆஸ்ரமம் இதுதானே?

இருவரும். ஆம்—

ச. முனிவர் ஆஸ்ரமத்தி லிருக்கிறாரோ?

இருவரும். இல்லை.—என்ன விசேஷம்?

ச. ஒரு காரணம்பற்றி என்னை இங்கு வரச் சொன்னார், அதற்காக வந்திருக்கிறேன்.

மு-பெ. ஆனால் சற்று இங்கே தங்கி யிரும், சீக்கிரம் வந்து விடுவார்.

ச. மிகவும் சந்தோஷம்— நீங்களும் உட்காரலாம்— பெண்காள், சற்று முன்பாக இங்கு வந்துகொண் டிருந்த

பொழுது திவ்யமான கானத்தைக் கேட்டேன்.— பாடியது நீங்கள் தானே?

மூ-பெ. ஆம்.

ச. ஏதோ—இன்னும் கொஞ்சம் கேட்க வேண்டுமென்று இச்சைப் படுகிறேன். இன்னும் கொஞ்சம் பாடவேண்டும்— சங்கோசம் வேண்டாம்— அதிதிகளுடைய மனதைத் திர்ப்தி செய்யவேண்டியது உங்களைப்போலொத்த உத்தமிகளுடைய கடமையாகும். [பெண்கள் பாடுகின்றனர்.] சபாஷ்! திவ்யமான சாரீரம். பெண்காள், உங்கள் சாரீரத்திற்குத் தகுந்த சரீரம் உங்களுக் கிருப்பதைப் பற்றி மிகவும் சந்தோஷப்படுகிறோம்

இ-பெ. அக்காள், நாம் பர்ணசாலைக்குப் போவோம் வா.

ச. ஒரு நிமிஷம்—உங்களுக்கு விவாஹமா யிருக்கிறதா?

மூ-பெ. இல்லை—அதைத் தாம் ஏன் கேட்கிறீர்?

ச. இல்லை, எனக்கும் விவாஹம் ஆகவில்லை இன்னும் என்பதை உங்களுக்குத் தெரிவிக்கும் பொருட்டு.

இ-பெ. ஐயா, தாங்கள் இவ்வாறு எங்களிடம் பேசுவது உமக் கடுக்காது. அக்காள், நாம் போவோம் வா.

ச. பெண்காள், இந்த ஒரு வார்த்தையை மாத்திரம் கேட்டு விட்டுப் போங்கள். உங்கள் தகப்பனார் என்னிடம் வந்து தனக்கு இரண்டு பெண்கள் இருப்பதாகவும் அவர்களை நான் கன்னிகாதானமாகப் பெறவேண்டும் என்றும் காலை என்னிடம் வந்து கேட்டார் அதற்கு நான் இசைந்து இங்கு வந்தேன். உங்கள் தகப்பனார் வார்த்தையை நீங்கள் பொய்யாகச் செய்யலாமோ?

மூ-பெ. கூடாது உண்மைதான்.—ஆயினும், அவர் வந்தவுடன் அவரிடமிருந்து நீங்கள் எங்களைப் பெறலாம். நீங்கள் நேராக எங்களிடம் இம்மாதிரி பேசுவது தர்மமல்ல.

ச. அதெப்படி தர்மமல்ல? க்ஷத்திரியர்களுக்கு காந்தர்வ விவாஹம் என்று ஒன்றுண்டு என்பதை மறந்தீர்கள்

போதும். எங்கள் முன்னோனாகிய துஷ்யந்தன் சகுந்தலையை எவ்வாறு மணந்தான்? [அருகிற் போகிறான்.] பெண்களே—

இ-பெ. ஐயா! நாங்கள் கற்புடைய பெண்கள்—எங்களிடம் தாம் இவ்வாறு நாடுவது தர்மமல்ல.— அக்காள், வா நாம் போவோம்— [விரைந்து போகிறார்கள்.]

ச. உங்கள் கற்பின் குணத்தை நான் பார்க்கிறேன்!

[தொடர்கிறான். அண்ணா! அண்ணா! என்று உள்ளே கூக்குரல்]

அசத்தியகீர்த்தி வருகிறான்.

அ. என்ன மாயமாயிருக்கிறது! எங்கு தேடியும் அப்பசுவைக் காணோம்.

சந்திரஹரி மறுபடி வருகிறார்.

ச. என்ன மாயமா யிருக்கிறது! என் கையிலகப்பட்டவர்கள் எப்படியோ தப்பி மறைந்தனர்களே!—மந்திரி, அப் பசுவைக் கண்டு பிடித்தனையா?

அ. இல்லை அரசே, என்னால் முடியவில்லை.

ச. மந்திரி, நாம் உடனே நம்முடைய பட்டணத்திற்குத் திரும்பிப் போவோம்— இது அன்றைத்தினம் வந்த சிஷ்டவாசியின் ஆஸ்ரமம் அவர் பெரிய மாயாவிபோல் தோன்றுகிறது. [உள்ளே சப்தம் "ஆஹா! அப்படியா செய்தான் அப்பாதகன்!]

அடடா! அதோ வருகிறார் பார் கோபத்துடன்.

சிஷ்டவாசி இரண்டு பெண்களையும் அழைத்துக் கொண்டு வருகிறார்.

சி. அடே! பாதகா! என்ன காரியம் செய்யத் துணிந்தாய்!

ச. ஸ்வாமி, நமஸ்காரம். என்ன விசேஷம்? தாங்கள் இவ்வாறு கோபம் கொள்ளவேண்டிய காரணம் என்ன?

சி. அடே! என்ன நடந்தது சற்று முன்பாக இவ்விடத்தில்?

ச. அதைத்தான் தங்களைக் கேட்கிறேன், ஒன்றும் நடக்க வில்லையே.

சி. அடே! அரசப்பதரே! பொய் பேசுகிறாயா என்னிடம்?

ச. ஸ்வாமி, உங்களை மிகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்—அந்த வார்த்தை மாத்திரம் தங்கள் வாயினின்றும் வரக் கூடாது—நான் சாட்சாத் அரிச்சந்திரன் வம்சத்திலுதித் தவன்—ஸ்வாமி, இந்த இரண்டு மாது சிரோமணிகள் யாரோ?

சி. அடே! அவர்கள் யாரென்று கேட்கிறாய்?—அவர்களை இதற்கு முன்பாக நீ பார்த்ததில்லையா?

ச. பார்த்திருந்தால் நான் உங்களைக் கேட்பேனா?

சி. இருக்கட்டும்—உன் வழியே போய்ப் பார்க்கிறேன்—இவர்கள் என் தவப் பெண்கள்.

ச. நிரம்ப சந்தோஷம்—இவர்களை அழைத்துக் கொண்டு தாங்கள் இப்பொழுது வந்த காரணம் என்னமோ?

சி. அடே! பாதகா! முழுப் பூசனிக்காயை சோற்றில் மறைக்கப் பார்க்கிறாயா! இவர்களுடைய கற்பை சற்று முன்பாக நீ அழிக்கப் பார்த்தனையாமே உண்மைதானா?

ச. சிவ சிவ சிவ! [காதைப் பொத்தி]
நான் முற்பிறப்பில் என்ன பாபம் செய்தேனோ இக்கரோ மான வார்த்தைகளைக் கேட்க! அல்லது என் முன்னோர் கள் செய்த பாபமோ?— ஸ்வாமி நான் ஏக பத்னி விரதன். என்னுடைய கோட்பாடு என்னவென்றால், எனக்கு மூத்தவர்களா யிருக்கும் ஸ்திரீகளை யெல்லாம் என் தாய் போலவும், எனக்கு இளையவர்களா யிருக்கும் ஸ்திரீகளை யெல்லாம் என் பெண்கள் போலவும், எனக்கு சமானமான வயதுடைப் பெண்களை என் சகோதரிகள் போலவும், பாவிப்பதே!— ஸ்வாமி, அப்படியிருக்க தாங் கள் இவ்வாறு என்மீது அவதூறு சொல்லலாகுமோ?

சி. ஆனல், இவர்கள் பொய் உரைப்பதாகவா சொல்கிறாய்?

ச. ஸ்வாமி! எல்லாம் அறிந்த தங்களுக்கு நான் எடுத்துக் கூறவேண்டிய அவசியமில்லை, ஆயினும் கூறுகிறேன். ஸ்திரீகள் வார்த்தையை நம்பலாகாதென்று பெரியோர்கள் கூறியிருப்பதை மறவாதீர்.

சி. அடே! பாபம் செய்தது மன்றி இப் பாவையர்மீதே பழி சுமத்தப் பார்க்கிருயா? இந்த க்ஷணம் உன்னைப் பஸ்மீகரப் படுத்தவா?

ச. தாங்கள் அவ்வாறு முனியலாகாது! தங்களால் என்னதான் முடியாது?—தாங்கள் இப்பொழுதென்னை என்ன செய்யவேண்டுமென்றீர்கள்?

சி. நீ செய்த குற்றத்திற்கு பிராயச்சித்தம் செய்யவேண்டும்.

ச. நான் என்னமோ குற்றம் ஒன்றும் செய்யவில்லை.—ஆயினும் உங்களுடைய கோபத்தைத் தணிப்பதற்காக—நீங்கள் சொல்லும்படியான பிராயச்சித்தத்திற்கு ஒப்புக்கொள்ளுகிறேன்.—என்ன பிராயச்சித்தம் செய்யவேண்டுமென்கிறீர்?

சி. இந்த என் இரண்டு தவப் பெண்களையும் உன் பட்டணம் அழைத்துக் கொண்டுபோய் விவாகம் செய்து கொள்.

ச ஸ்வாமி! இது தவிர வேறு ஏதாவது சொல்லுங்கள். என் மனைவி ஒருத்தி யிருக்கிருள், மஹா பதிவிரதை! இந்த சமாசாரம் கேள்வி மாத்திரம் படுவாளாயின் பிறகு நான் இறந்தவனே! முன்பு தன் கையால் என்னைக் கொன்றுவிட்டு மறுவேலை பார்ப்பாள். ஆகவே, நான் இன்னும் கொஞ்சகாலம் உயிரோடிருக்க வேண்டுமென்று உமக்கு இச்சை யிருக்குமாயின் இதைத் தவிர வேறு ஏதாவது சொல்லுங்கள்—ஒப்புக் கொள்ளுகிறேன்.

சி. சத்யமாக?

ச. நான் சத்யம்கூட பண்ணவேண்டுமா? ஹரிச்சந்திரன் மரபில் உதித்தவன் நான். இதை மாத்திரம் மறவாதீர்கள்.

சி. ஆனல்—உன் ராஜ்யத்தை யெல்லாம் எனக்கு தானமாகக்

கொடுத்துவிடு—என்ன விழிக்கின்றாய்?— இல்லாவிட்டால் உன்னை பஸ்மீகரப்படுத்தி விடுவேன்!

ச. ஸ்வாமி, தடை யொன்றுமில்லை.—இதைவிட எனக்கு பெருமை என்ன வேண்டும்? தங்களுடைய கை கீழாகவும் என் கை மேலாகவும் இருக்க நேரிட்டது என் புண்ணிய பலன்.

சி. ஆனால் உடனே தானஞ் செய்துவிடு—என்ன யோசிக்கிறாய்?

ச. வேறொன்று மில்லை.—இங்கு நான் தானஞ் செய்துவிட்டு இப்படியே போய்விட்டால் என் பிரஜைகளெல்லாம் அதை அறியாது கலகஞ் செய்து உமக்கு ஒருவேளை கஷ்டம் விளைத்தாலும் விளைப்பார்கள். ஆகவே, நாளை காலை நீங்கள் பட்டணம் வந்தால் நகர மாந்தர்கள் அனைவரும் அறிய, தானம் செய்து உம்மை சிம்மாசனத்தில் உட்கார வைத்து முடிசூட்டுவதே நியாயம் எனத் தோற்றுகிறது எனக்கு.

சி. ஆம், நீ கூறுவதும் சரிதான். அப்படியே நாளை காலை உனதரண்மனை வந்து சேர்கிறோம். ஞாபக மிருக்கட்டும்.

[பெண்களை அழைத்துக்கொண்டு போகிறார்.]

அ. என்ன அரசே, இப்படிச் சொல்லிவிட்டீர்களே?

ச. பயித்தியக்காரா! இல்லாவிட்டால் நாம் இவ்விடமிருந்து உயிர் தப்புவதே கஷ்டம். நாளை காலை நமது பட்டணத்திற்குள் அடி யெடுத்து வைக்கட்டும், அப்புறம் உயிரோடிருக்கிறானா பார்!—வா நாம் சீக்கிரம் பட்டணம் போய் இதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்யவேண்டும்.

[போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

# இரண்டாம் அங்கம்

---

## முதல் காட்சி

இடம்—சந்திரஹரியின் கொலு மண்டபம்.

சிஷ்டவாசி சிம்மாசனத்தில் முடிசூடி வீற்றிருக்கின்றார்.

சசி நட்சத்திரன் முதலிய அவரது சிஷ்யர்கள் இரு பக்கமும் சூழ்ந்து நிற்கின்றனர்.

சந்திரஹரி, மதிசந்திரை, தாசதேவன், மூவரும் கைதிகளாக எதிரில் நிற்கின்றனர்.

சி. சந்திரஹரி! நீ இவ்வளவு துர்க்குண முடையவனென்று நான் கனவிலும் நினைக்கவில்லை. உன் ராஜ்யத்தை எனக்கு தாரை வார்த்துக் கொடுப்பதாகக் கூறி, இங்கு என்னை வரவழைத்து, என்னை எத்தனை விதத்தில் கொல்லப் பார்த்தாய்! என்ன ஆச்சர்யம்! பெண்பாலாகிய உன் மனைவியும் சிறு பிள்ளையாகிய உன் மைந்தனும் இதற்கு உடந்தையா யிருந்தார்களே! என் தபோ பலத்தினால் உன் சூழ்ச்சிகளை யெல்லாம் அறிந்து, அவைகளை அழித்து, உன் ராஜ்யத்தைக் கைப்பற்றினேன் கண்டனையா? இப்பொழுதாவது உன் துன்மார்க்கத்தை விட்டு சன்மார்க்கத்தில் திரும்புகிறாயா? இப்பொழுதாவது நீ செய்தது தவறு என்று ஒப்புக்கொள்ளுகிறாயா?

ச. ஸ்வாமி! கபட மார்க்கமாய் என் ராஜ்யத்தைக் கைப்பற்றியது மன்றி, உங்களைக் கொல்ல யத்னப்பட்டதாக வீணாக என்மீது அகோரமான பழி சுமத்தியது மன்றி, நான் செய்தது தவறு என்று பொய் பேசும்படியாகவும் என்னைக் கேட்கிறீர்களே! இது தம்மைப்போன்ற ரிஷிகளுக் கடுக்குமா?

சி. அடே! சந்திரஹரி! இன்னும் அந்தப் பிடிவாதமா? வீணாக இன்னும் அழிந்து போகாதே! நான் சொல்வதைக் கேள். இப்பொழுதாவது நான் இந்த ராஜ

யத்தை உமக்கு கொடுக்கிறேன் என்று கூறியது உண்மை தான், ஏதோ அவசரத்தில் வாய் தவறி மொழிந்துவிட்டேன், என்னை மன்னிக்க வேண்டுமென்று உண்மையைச் சொல், இவ் விராஜ்ய முழுவதையும் உனக்கே கொடுத்து விடுகிறேன்; உன் மனைவி மக்களுடன் சுகமாய் வாழ். என்ன சொல்லுகிருய்?

ச. ஸ்வாமி, எல்லா மறிந்த தாங்கள் இவ்வாறு என்னைப் பாபத்திற் காளாகும்படியாகச் செய்ய முயல்வது சரியல்ல. என் வாயார நான் எவ்வாறு ஒரு பொய் புகலுவேன்? இந்த ராஜ்யத்தை நான் எவ்வாறு உங்களுக்கு கொடுக்கிறேன் என்று சொல்லி யிருப்பேன்? இந்த ராஜ்யம் யாருடையது? என்னுடையதா? பிரஜைகளின் நன்மைக்காக என்னிடம் அடைக்கலமாக வைக்கப்பட்ட பொருள், அதை ஒருவருக்குக்கொடுக்க எனக்கு என்ன சுதந்தரம் உண்டு?

சி. என்ன கற்றிருக்கிருன்! என்ன கற்றிருக்கிருன்! கற்ற தவ்வளவையும் அதர்ம வழியில் உபயோகிக்க! இவற்றை யெல்லாம் சன்மார்க்கத்தில் உபயோகித்திருந்தால் இவனைவிட மேலான புருஷன் இப்புவியில் இருப்பானே?—சந்திரஹரி! அதெல்லாம் போகட்டும்—என்னைக் கொல்லப் பார்த்தது தவறுதான் என்று ஒரு வார்த்தை ஒப்புக்கொள் எல்லாவற்றையும் மன்னித்து விடுகிறேன்.

ச. [காதை கரத்தால் பொத்தி] சிவ சிவ சிவ! மன்னுயிர்களைத் தன்னையும் தன்னுயிராகப் பாவித்த நான் இக் கர்ண கடோமான வார்த்தையும் கேட்கும்படி நேரிட்டதே! ஸ்வாமி! இது உங்கள் பேரில் தவறில்லை—என் முன்னோர்கள் ஏதோ பாபம் செய்திருக்கவேண்டும். அதை நான் இப்பொழுது அனுபவிக்கிறேன். இல்லாவிட்டால் தாங்கள் இப்படிச் சொல்ல, நான் கேட்கும்படி நேரிடுமா?

சி. பாப மிழைத்ததுமன்றி, உன் முன்னோர்களையும் பழிக்கின்றனையா பாபி! இப்படிப்பட்ட பாதகன் இனி இந்த

நாட்டில் இருபபது நயாயமல்ல— ஈச நட்சத்திரா,—இவர்களிட மிருந்து ராஜாங்கத்திற்குரிய பொருள்களை யெல்லாம் வாங்கிக் கொண்டீரையா?

ஈ. அதையேன் கேட்கிறீர்கள்! எவ்வளவோ நயமாய் கேட்டுப் பார்த்தோம், பயமுறுத்திப் பார்த்தோம்—மூவரும் ஒன்றும் கிடையாதென்கிறார்கள். பொக்கஷம் காலியா யிருக்கின்றது. எங்கேயோ அவ்வளவு சொத்தையும் மறைத்து வைத்திருக்கிறார்கள்.

சி. ஆஹா! அப்படியா சமாசாரம்! இருக்கட்டும். அதை எங்கே ஒளித்து வைத்திருக்கிறார்கள் என்று என் ஞான திருஷ்டியினால் அறிந்து கைப்பற்ற எனக்குத் தெரியும். உடனே இம் மூவர்களையும் அழைத்துக்கொண்டு போய் நமது நாட்டெல்லைக் கப்பால் விட்டுவிடு. பிறகு நமது நாட்டெல்லைக்குள் அடி யெடுத்து வைப்பார்களாயின் கண்டவர் யாவரும் இவர்களைக் கொன்றுவிடலாம் என்று பறை சாற்றி வை.

ஈ. அப்படியே.

ச. ஸ்வாமி, விடை பெற்றுக் கொள்ளுகிறோம். எங்கள் ஞாபகம் கொஞ்சம் இருக்கவேண்டும்.

[மூவரும் வணங்கிச் செல்ல முயல்கின்றனர்.]

சி. அடடா! சந்திரஹரி! சந்திரஹரி! இப்படி வா, அதை முற்றிலும் மறந்தேன்!—நான் சில தினங்களுக்கு முன் யாகத்திற்காகவென்று ஒன்பதினாயிரம் பொன் வைத்து விட்டுப் போனேனே அது எங்கே?

ச. [அருகில் வந்து] என்ன ஸ்வாமி பொன்னா?

சி. ஒன்பதினாயிரம் பொன் கொடுத்துவிட்டுப் போனேனே அது?

ச. என்ன ஸ்வாமி! பெரிய அபவாதமா யிருக்கிறது! தாங்களாவது, ஒன்பதினாயிரம் பொன்னையாவது என்னிடமாவது கொடுத்துவிட்டுப் போவதாவது?

சி. அடே! அதையும் இல்லை என்கிறாயா?

ச. ஸ்வாமி! தாங்கள் ஏதாவது கனவு கண்டீர்களா என்ன?

சி. ஆ ஹா ஹா! இப்படிப்பட்ட புரட்டன் இப்புவியில் இருப்பானென்று நான் கனவிலும் நினைக்கவில்லை! நான் சில தினங்களுக்கு முன்பாக இவ்விடம் வந்து உன்னிடம் ஒப்புவிக்கவில்லையா ஒன்பதினாயிரம் பொன்?

ச. ஸ்வாமி, இந்த பூமிதேவி ஆகாயவாணி அறிய சொல்கிறேன், அப்படி நடந்ததே யில்லை— இருக்கட்டும், அப்படி நேர்ந்திருந்தால் யாராவது சாட்சி இருக்கிறார்களா?

சி. இதோ உன் மந்திரியைக் கேட்டுப் பார்?

ச. ஏனப்பா, சில தினங்களுக்கு முன் இவர் வந்து என்னிடம் ஒன்பதினாயிரம் பொன் கொடுத்துவிட்டுப் போனாராமே உண்மைதானா?

அ. ஸ்வாமி, சில தினங்களுக்கு முன்பாக தாம் இங்கே வந்தீர்களா?

சி. சரி! சரி! அரசனுக்கேற்ற மந்திரிதான்! இப்படிப்பட்டவன் நீயும் என் ராஜ்யத்தி லிருக்கவேண்டியதில்லை, இவர்களுடன் நீயும் போ!

அ. உத்தரவுபடி.

சி. அடே! சந்திரஹரி, மற்றெல்லாப் பாபங்களுக்கும் பிராயச்சித்தம் உண்டு, அடைக்கலப்பொருளை இல்லை என்று மறுப்பதற்கு பிராயச்சித்தமே கிடையாது. ஆகவே, அந்த ஒன்பதினாயிரம் பொன்னையும் மீண்டும் நீ எனக்குக் கொடுத்துத்தான் தீரவேண்டும்.

ச. உம்மோடு வாதாடுவதில் பிரயோஜன மில்லை.—இப்பொழுது எங்கிருந்து என்னைக் கொடுக்கச் சொல்கிறீர்கள்— என் ராஜ்ய முழுவதும் தாங்கள் அபகரித்துக்கொண்டு?

சி. அதெல்லாம் எனக்குத் தெரியாது! எங்கேயாவது யாசகம் செய்தாவது என்னிடம் சேர்ப்பிக்கவேண்டும்.

ச. உம்—சரி—அப்படியே செய்கிறேன்.

சி. அப்படிச் செய்வதிலும் இந்நாட்டிலிருந்து நீ யாசகம் செய்யக்கூடாது, இந்நாட்டிற்கு வெளியே போய்தான் யாசகம் செய்யவேண்டும்.

ச. அப்படியே செய்கிறேன்— உத்தரவு பெற்றுக்கொள்ளு கிறேன்.

சி. கொஞ்சம் பொறு. இவ்வளவு சூது செய்தவன், இந் நாட்டெல்லையைக் கடந்தவுடன் எங்கேயாவது ஓடிப் போய்விட்டால் நான் என்ன செய்வது? சிஷ்யா ஈச நட்சத்திரா, இவனுடன் போய் இவன் அந்தப் பொன் ஒன்பதினாயிரமும் கொடுக்குமளவும் இவனை விடாதே.

ஈ. அப்படியே ஸ்வாமி,

சி. சந்திரஹரி, இதற்காக உனக்கு நாற்பது தினம் தவணை தருகிறேன்—அதற்குமுன் சேர்ப்பிக்க வேண்டும்.

ச. ஸ்வாமி, நாற்பது நாள் என்னத்திற்கு?—நான்கு தினங் கள் கொடுத்தால் போதும்—வா அப்பா வா, நீதானே எங்களோடு வருகிறாய்? வா.—ஸ்வாமி நாங்கள் உத் தரவு பெற்றுக் கொள்ளுகிறோம்.

சி. போய் வாருங்கள், பத்திரம்! என் சிஷ்யனுக்கு ஏதாவது கெடுதி செய்தால் நான் ஞான திர்ஷ்டியால் அறிந்து உங் களை பஸ்மீகரப்படுத்தி விடுவேன்.

ச. சே சே! அப்படி யெல்லாம் செய்வோமா.—நாங்கள் வருகிறோம். [நால்வரும் வணங்கிச் செல்கிறார்கள்.]

காட்சி முடிகிறது.

## இரண்டாம் காட்சி

இடம்—ஓர் அடர்ந்த கானகம்.

சந்திரஹரி, மதிசந்திரை, தாசதேவன், அசத்யகீர்த்தி வருகிறார்கள்.

ச. அம்மட்டும் அந்தப் பிராம்மணன் கையினின்றும் தப்பினோமே!

அ. ஆம், அது நம்முடைய அதிர்ஷ்டம்தான், அவன் பெரிய மாயாவிபோலும். நாம் எத்தனை தரம் அவனுக்குத் தெரியாது மறைந்தும் நாமிருக்குமிடம் எப்படியோ கண்டு பிடித்து வந்தானே!

ம ஒரு வேளை இப்பொழுதும் இங்கு நாமிருப்பதைக் கண்டு பிடித்து வந்தால்?

ச. அது முடியாத காரியம். திரும்பி வாராதபடி தான், நம்மைச் சூழ்ந்த அக்காட்டுத் தீயில் தள்ளிவிட்டேனே, அதினின்றும் உயிருடன் தப்புவது அசாத்யம்—அதிருக் கட்டும் இப்பொழுது நாம் போஜனத்திற்கென்ன செய்வது?—எங்கெயாவது கனிகள் அகப்பட்டாலும்—

[சுற்றிப் பார்க்கிறான்.]

அடடா! அந்த பிராம்மணன் எப்படியோ தப்பி உயிருடன் வருகிறானே!— மதிசந்திரா, தாசதேவா, நீங்களிருவரும் மூர்ச்சையால் சோர்ந்து கிடப்பதுபோல் படுத்துக்கொள்ளுங்கள்.—மந்திரி, நீ ஏதோ அப்பிராம்மணனைத் தேடி அயர்ந்து வருவதுபோல் தூரத்திலிருந்து இந்தப் பக்கம் வா.—

[மதிசந்திரையும் தாசதேவனும் மூர்ச்சையானதுபோல் படுக்கின்றனர். அசத்யகீர்த்தி ஒருபுறம் மறைகிறான்.]

[உரக்க] ஐயோ! அந்த பிராம்மணன் இக்காட்டில் அகப்பட்டு வழி தெரியாது என்ன கஷ்டப் படுகிறாரோ! பாவம்!—

நசநட்சத்திரன் வருகிறான்.

ஆஹா! ஸ்வாமி! வாருங்கள்! வாருங்கள்! மறுபடியும்

உங்களைக் காணப்பெற்றேனே— இது நான் செய்த புண்யமே!

ரு. ஏண்டாப்பா! காட்டுத்தீயில் தள்ளிவிட்டோமே இவன் பிழைக்கமாட்டான் என்று நினைத்தாயோ?

ச. சிவ சிவ! ஸ்வாமி, நானு உங்களைத் தீயில் தள்ளினேன்! உங்களை அத்தீயினின்றும் தப்பிவைக்க வேண்டுமென்று நான் பட்ட கஷ்டம் அந்த தெய்வத்திற்குத்தான் தெரியும்! ஒரு பாபமுமறியாத என்மீது இவ்வாறு தாங்கள் பழி சுமத்தலாமா?—இதோ பாருங்கள்! எங்கு இக் காட்டில் வழி தெரியாது கஷ்டப்படுகிறீர்களோவென்று நாங்கள் எல்லோரும் நான்கு திக்கிலும் சுற்றி அயர்ந்தோமே உம்மைத்தேடி; சுற்றிய அலுப்பினால் என் மனைவியும் மகனும் இதோ மூர்ச்சையாய்க் கிடக்கிறார்கள்—

ரு. உம்!—இன்னும் எவ்வளவுதான் பொய் பேசுவாயோ பார்ப்போம்.—சொல்லிக்கொண்டு போ.

ச. ஸ்வாமி, இவ்வளவு கஷ்டமனுபவிப்பதும் எனக்கு வருத்தமாயில்லை, தங்கள் வாயால் நான் பொய் பேசுவதாகக் கூறுகிறீரே, அதுதான் எனக்கு துக்கம் விளைவிக்கின்றது [துக்கப்படுகிறான்.]

நீங்கள் என்னவேண்டுமென்றாலும் சொல்லுங்கள், பொறுக்கிறேன், பொய் பேசுகிறேன் என்று மாத்திரம் சொல்லாதீர்கள் என்னிடம்! உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்.

அசத்தியகீர்த்தி வருகிறான்.

அ. அரசே, எங்கு தேடியும் காணோம்— அடடா! இதோ இருக்கிறாரே! நாம் இத்தனை நாழிகை தேடியும் கண்டுபிடிக்க வில்லையே!

ம. [மூர்ச்சை தெளிந்ததுபோல் எழுந்து] பிராணநாதா, அந்தப் பிராம்மணர் அகப்பட்டாரா?— ஸ்வாமி, வாருங்கள்! மிகவும் சந்தோஷம். எப்பொழுது வந்தீர்கள்?

தா. [மூர்ச்சை தெளிந்ததுபோல் எழுந்து] அண்ணா! இதோ இருக்கிறாரே! இத்தனி நாழி நாம் தேடி அலுத்தோமே!

ஈ. ஆஹா! சந்திரஹரி! எனக்கு வேறொன்றும் ஆச்சரியமில்லை. உனக்கேற்ற மனைவி ஒருத்தி, மகன் ஒருவன், மந்திரி ஒருவன், கிடைத்தார்களே, அதுதான் எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது.—அதிருக்கட்டும், இனி என் கையினின்றும் தப்ப விடப்போகிறதில்லை—முனிவர் பொன்னுக்கு என்ன வழி சொல்லுகிறாய்? நாலுநாள் தவணை அப்பொழுதே கடந்துவிட்டது—

ச. நாலு நாள் தவணையா?—ஸ்வாமி, என்ன இப்படி மறந்து பேசுகிறீர்கள்—நான் கேட்டது நாலு மாசத் தவணையல்லவோ?

ஈ. சரி! அதற்கும் வழி வைத்தாயா? இருக்கட்டும் நாலு மாசமே வைத்துக்கொள். நீ அந்த ஒன்பதினாயிரம் பொன்னையும் கொடுக்கிற வரையில், உன்னை விடப்போகிறதில்லை—

ச. ஸ்வாமி, அந்த பொன்னைப்பற்றி மாத்திரம் உங்களுக்கு சந்தேகமே வேண்டாம். நான் என்ன கஷ்டப்பட்டாயினும் அதைச் சேர்த்துவிடுகிறேன்—இப்பொழுது நிரம்ப பசியா யிருக்கிறது. நேற்றிரவு புசித்தது, இன்றைக்கு இரண்டாகிறது, பொழுதுவிடிந்தால் மூன்று தினமாகும்! உங்களிடம் ஏதாவது பட்சணம் இருக்கிறதா?

ஈ. என்னிடத்தில் ஒன்றுமில்லை.—நீ எனக்கு கொண்டுவந்து கொடுப்பதை விட்டு என்னையே கேட்கிறாயோ?

ச. இல்லை—அந்த மூட்டையில் ஏதோ இருக்கிறதுபோல் தோன்றியது.

ஈ. அது, இக்காட்டில் இருட்டிவிட்டால் குளிர் காய்வதற்கும், துஷ்ட மிருகங்கள் அணுகாதபடிக்கும், தீ மூட்ட வேண்டுமேயென்று உதிர்ந்த சருகுகளையெல்லாம் பொறுக்கி வைத்தேன்.

ச. எங்கள் அதிர்ஷ்டம்!—ஸ்வாமி! எனக்காக நான் துக்கப்படவில்லை என் மனைவியும், மகனும் உணவின்றி வருந்துகிறார்களே என் பொருட்டு என்றே கவலையாயிருக்கிறது.

ஈ. சந்திரஹரி, நான் சொல்வதைக் கேள், ஏன் இவ்வளவு கஷ்டப்படுகிறாய்? நீ மாத்திரமன்றி உன் மனைவியும் மகனும் உன்னோடு கஷ்டப்படவேண்டியிருக்கிறது; நான் சொல்வதைக் கேள்.—அந்த ஒன்பதினாயிரம் பொன்னை யும் எங்கே மறைத்து வைத்திருக்கிறாய் சொல்லிவிடு, உங்கள் கஷ்டத்தை யெல்லாம் நான் நிவர்த்தித்து வரு கிறேன்.—

ச. சிவ சிவா! பரமேஸ்வரா! இந்த வார்த்தையும் நான் காதாரக் கேட்கும்படி நேரிட்டதே! [கண்ணீர் விடுகிறான்.]

ஈ. அதெல்லாம் போனால் போகிறது—முனிவர் உன்னிடம் ஒன்பதினாயிரம் பொன் ஒப்புவித்தது உண்மைதானே! உண்மைதான் என்று ஒரு வார்த்தை சொல்லிவிடு, உங் களை விட்டுவிட்டு நான் போய்விடுகிறேன்—நீங்கள் சுக மாய் எங்கேயாவது போய் வாழ்ந்திருங்கள்.

ச. ஸ்வாமி! என்னைப் பொய்யா பேசும்படி சொல்லுகிறீர் கள்?—பிராம்மணோத்தமரான உங்களுக்கு இது அடுக்கு மா? இது தர்மமாகுமா? இது நியாயமா?

ஈ. மறுபடியும் பழைய கதை ஆரம்பித்தாயே!—சரி, ஆனால் உங்களை நான் விடப்போகிறதில்லை— இங்குதா னிருங் கள்—நான் போய் அருகாமையில் இருக்கும் காட்டருவி யில் நித்யகடனை முடித்து வருகிறேன். தப்பி எங்கெ யாவது மறுபடியும் போகப் பார்த்தீர்களா, உங்களை பஸ்மீகரமாய்ப் படுத்திவிடுவேன்!

[மூட்டையை ஒருபுறமாக வைத்து விட்டுப் போகிறான்.]

தா. அண்ணா! அந்த மூட்டையில் ஏதோ பட்சண வாசனை வருதண்ணா.

ச. நானும் அப்படித்தான் நினைக்கிறேன்!— பிராம்மணன் ஜலத்தில் இறங்கட்டும்— அவிழுங்கள் சீக்கிரம் அதை!

[அவிழ்த்து அதிலுள்ள பட்சணத்தை யெல் லாம் நால்வருமாக விரைவில் புசிக்கின் றனர்.]

மதிசந்திரா, எனக்கு ஒரு யுக்தி தோன்றுகிறது, இந்த பிராம்மணன் என்ன சூழ்ச்சி செய்தாலும், அந்தப் பொன்னைப் பெறாமல் நம்மை விட்டுப் போகமாட்டான் போ லிருக்கிறது— அவன் வந்தவுடன், அவனிடம், இதோ அருகில் தென்காசி யிருக்கிறது அங்கு உன்னை அழைத்துக் கொண்டுபோய் அடிமையாக விற்று அத் தொகையைச் செலுத்துவதாகக் கூறுகிறேன். நீயும் அதற்கு உடன்பட்டதுபோல அபிநயி.—பிறகு அங்கு போனவுடன் மேல் நடக்கவேண்டியதைப் பார்த்துக் கொள்வோம்.

ம. ஆம் பிராணநாதா, அதுதான் நல்ல யுக்தி, யாருக்காவது என்னை விற்பதுபோல விற்று விடும், பிராம்மணனுக்கு அந்தப் பொன் சேர்ந்தவுடன், மறுநாள் எப்படியாவது நான் தப்பித்துக்கொண்டு உம்மிடம் வந்து சேர்ந்துவிடு கிறேன்.

ச. ஆஹா! பெண்மணி, உலகில் ஸ்திரீகள் இருந்தால் உன் னைப்போல் இருக்கவேண்டும்!—

[ஆலிங்கனம் செய்துகொள்ளுகிறான்.]

அந்தப் பிராம்மணன் கரையேறி விட்டான். சீக்கிரம் இங்கிருக்கும் சரகுகளைச் சேர்த்து இந்த மூட்டையில் வைத்துக் கட்டிவிடுங்கள்.

[அங்ஙனமே செய்கின்றனர்.]

நசநட்சத்திரன் அனுஷ்டானம் முடித்துக்கொண்டு வருகிறான்.

ச. ஸ்வாமி, வாருங்கள் கொஞ்சம் சீக்கிரம் புறப்படவேண் டும். நாங்கள் எல்லாம் பசியோடிருக்கிறோம்; அருகாமை யிலுள்ள தென்காசிக்குப் போய் உணவுக்கு வழி தேட வேண்டும் சீக்கிரம்.

ந. இதோ வந்து விட்டேன்—கொஞ்சம் பலஹாரம் செய்து விட்டுப் புறப்படுகிறேன், எனக்கும் மிகவும் பசியாயிருக் கிறது.

ம. பிராணநாதா, எனக்கு காதடைத்துப் போகிறது, ஏதாவது பழமாவது கொண்டு வாருமே.

ச. ஸ்வாமி, தாங்கள் பலஹாரம்செய்து ஏதாவது மிகுதி யிருந்தால் கொஞ்சம் தயைபுரிய வேண்டும்—பெண்பால், பசி தாங்க முடியவில்லை, பாபம்—

தா. எனக்குக்கூட அப்பா!— [ஏப்பம் விடுகிருன்.]

ஈ. என்னடா ஏப்பமிடுகிருய்?

தா. பசி ஏப்பம்!

ஈ. பொறுங்கள், நான் புசித்துவிட்டு உங்களுக்கும் கொஞ் சம் கொடுக்கிறேன். [மூட்டையை அவிழ்த்துக் கொண்டே] இவ்வளவு கஷ்டப் படுவானேன்? என் சொற்படி— அடடா!— [அதில் சருகு விருக்கக் கண்டு] சந்திரஹரி! என்ன சமாசாரம்?

ச. என்ன ஸ்வாமி?

ஈ. இதில் இருந்த பட்சணம் பலஹாரமெல்லாம் எங்கே?

ச. என்ன ஸ்வாமி இப்படி கேட்கிறீர்கள்? நான் முன்னே கேட்டபொழுது தீமூட்டுவதற்காக சருகுகள் சேர்த்து வைத்திருப்பதாகச் சொன்னீர்களே?

ஈ. இந்தக் கதையெல்லாம் உதவாது! உண்மையை உரைத் துவிடுங்கள். இதில் இருந்ததை யெல்லாம் நீங்கள்தானே தின்று விட்டீர்கள்?

ச. சிவ சிவ! அப்படிச்செய்ய நான் கனவிலும் நினைப்பெனு ஸ்வாமி! இந்த வனதேவதைகள் சாட்சியாகச் சொல்லு கிறேன்--ஆணைப்படிக்கி! தோஷமில்லையென்று சொல்லுங் கள்; அதில் ஒரு பருக்கையும் நான் தீண்டினவனல்ல—

ஈ. பிறகு என்னமாடாப்பா போயிருக்கும் நான் வைத்தது?

ச. மதிசந்திரா, நீ ஏதாவது எடுத்தாயா?—

ம. நாதா, அந்த மூட்டையை விரலால் தீண்டிய பாபியார்?

ச. அடெ பையா, நீ?

தா. என்னப்பா, அந்த சரகையா நான் துண்ணுவேன்?

ச. மந்திரி, நீ ஏதாவது ?—

அ. அரசே, அந்த மூட்டையை இதுவரையில் கண்ணுலும் பார்க்கவில்லையே நான்!

ச. கேட்டீரா ஸ்வாமி ?

ஈ. பிறகு எப்படி மாயமாய்ப் போய்விட்டது? அதையாவது சொல்.

ச. ஸ்வாமி, எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. பிராம் மணர்கள் வாக்கு பலிக்கும் என்கிருர்களே, அதன்படி, நான் கேட்டபோது நீங்கள் உதிர் சரகு என்று சொல்ல வே, அதன்படியே நீங்கள் வைத்திருந்த பட்சண பல ஹாரமெல்லாம் சரகாய் மாறிப்போய்விட் டிருக்கவேண்டு மென்று நினைக்கிறேன்! அதற்காகத்தான் விளையாட்டிற் கும் பொய் பேசலாகாதென்று பெரியோர்கள் சொல்லி யிருக்கிருர்கள். இந்த நியாயத்தைக் கடைப்பிடித்து தான் நான் கனவிலும் பொய்யைப்பற்றி நினைக்கிறதில்லை.

ஈ. அடடா!—சந்திரஹரி! உன் புத்திக்கு மெச்சினேன்! இவ்வளவு புத்தியையும் நல்வழியில் உபயோகிக்கக் கூடாதா?

ச. நான் என்ன துர்மார்க்கத்திலா உபயோகிக்கிறேன்?

ஈ. அப்பா, உன்னோடுவாதாட என்னல் முடியாது—போன தெல்லாம் போகட்டும். இன்னும் எத்தனைநாள் நான் உன் பின்னல் திரிவது? ஏதாவது யுக்திசெய்து அந்த ஒன்பதினுயிரம் பொன்னையும் கொடுத்துவிடு, முனிவ ரிடம் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டு, என் வழி நான் போகிறேன்.

ச. ஸ்வாமி, நாளையுடன் உங்கள் கவலையெல்லாம் ஒழிந்தது என்று நினையுங்கள். அருகாமையில் தென்காசி யென் கிற திவ்ய க்ஷேத்திரமிருக்கிறது, அங்கு போய், என் மனைவியை யாருக்காவது அடிமையாக விற்று, அந்தப்

பொன்னை நீங்கள் வாங்கிக்கொண்டு போய், முனிவரிடம் சேர்த்து விடுங்கள்.

ந. [ஒரு புறமாக] இதிலும் என்ன சூது செய்யப் போகிறுேனே?—அப்படியே செய், வா போவோம்.

[எல்லோரும் போகிறுர்கள்.]

காட்சி முடிகிறது.

# மூன்ரும் அங்கம்

## முதல் காட்சி

இடம்—தென்காசி கோயிலுக் கெதிர்.

சந்திரஹரி, மதிசந்திரை, தாசதேவன், அசத்தியகீர்த்தி நச நட்சத்திரன் வருகிறுர்கள்.

ச. பெண்மணி, நாம் செய்த புண்ணியவசத்தால் இதோ தென்காசி அடைந்துவிட்டோம். அதோ பார் கோயில் கோபுரம் தெரிகிறது.—கண்மணி, நீ இங்குதான் தங்கியிருப்பாய், அடிமையாகப் போகிறுேமே என்று நீ துக்கப்பட லாகாது. முனிவருக்கு நாம் கொடுக்கவேண்டிய கடன் ஒன்றுமில்லாதிருப்பினும், இப் பொன்னை அவருக்கு தானமாகக் கொடுக்கிறுேம் என்று சந்தோஷப்படவேண்டும்.— நாங்கள் போய் இப் பட்டணத்தில் யாராவது ஒன்பதினுயிரம் கொடுத்து உன்னை அடிமை கொள்ளத் தக்கவரைத் தேடி அழைத்து வருகிறுேம் சீக்கிரம்.

ம. பிராணநாதா, அப்படியே செய்யுங்கள், தங்கள் வார்த்தைக்குக் குறுக்குண்டோ? ஆயினும் இவ்விடத்தில் நான் தனியா யிருப்பதென்றுல் சங்கோசமா யிருக்கிறது. உங்கள் உத்தரவின்மீது இப் போர்வையால் நான் முற்றிலும் மூடி யிருக்கின்றேன்.

ச அங்ஙனமே செய்.—ஸ்வாமி வாருங்கள் போவோம்.

[மதிசந்திரை தாசதேவன் தவிர மற்றவர்கள் போகின்றனர்.]

ம. அடே பையா, யாராவது பெண்பிள்ளைகள் இங்கு வந்து நான் என்ன செய்கிறேன் என்று உன்னைக் கேட்டால் நிஷ்டையி லிருக்கிறார்கள், அவர்களாக நிஷ்டை கலைகிற வரையில் ஒருவரும் பேசக்கூடாது என்று சொல் தெரியுமா ?

தா. அப்படியே அம்மா.

[மதிசந்திரை போர்வை யொன்றால் உடலெல்லாம் மூடிக்கொள்கிறாள்.]

கண்டிகாலி வருகிறாள்.

கண். ஐயோ ! எத்தனிநாளு இந்தப் பாழுங் கோயில்லே அடைபட்டிருக்கிறது அன்ன ஆகாரமில்லாதெ!—வெளியே வந்தா எங்கே அந்தப் படுக்காளிப் பிராம்மணன் கண்டு பிடிச்சூடுறானோ இன்னு பயமாயிருக்கு!–ஆ! அது யார் அது? யாரோ ஒரு பொம்பிளுட்டிபோலிருக்கு, முத்திலும் மூடியிருக்கிறு வஸ்திரத்தாலே—யாரம்மா அது ?

தா. அம்மா, அவங்களே ஒண்ணும் கேக்காதைங்க, நிஷ்டையிலிருக்கராங்க, நிஷ்டை கலையர வரைக்கும் ஒருத்தரோடவும் பேசமாட்டாங்க.

கண். ஏன் நிஷ்டையி லிருக்கிறுக ?

தா. அது, எனக்குத் தெரியாது, அவுங்களுக்குத்தான் தெரியும்.

ம. தேவி தேவி ! எல்லாம் உவது கருணை !

[நிஷ்டை கலைவதுபோல் பாவிக்கிறாள்.]

கண். நிஷ்டை கலைந்து விட்டாப்போலிருக்கு.—அம்மா, நீங்க யாரு ? இங்கே தனியா என்ன செய்கிறீக ?

ம. யாரோ பெண்பாலாயிருக்கிறது—ஏதோ கஷ்டத்திலிருக்கிறதுபோல் தோற்றுகிறது—நாம் அடைந்த நன்மையை அவளும் அடையட்டும் பாபம்!—அம்மா, நான் இருப்பது

அயலூர், பஞ்சத்தினுல் மிகுந்த கஷ்டப்பட்டு இவ்வூருக்கு வந்தேன், இக் கோபுரவாயிலில் நின்று புலம்பிக்கொண்டிருந்தேன், யாரோ ஒரு மஹான் வந்து, என்னை சமாதானம் செய்து, இப் போர்வையைக் கொடுத்து, இதனுல் முற்றிலும் மூடி, எனக் கோர் மந்திரோபதேசம் செய்து, ஒரு நாழிகை பர்யந்தம் ஒருவருடனும் ஒரு வார்த்தையும் பேசாமல் இதை தியானித்து நிஷ்டையிலிருந்தால் உன் மனேபீஷ்ட மெல்லாம் கைகூடும் என்று கூறி மறைந்தார், அப்படியே செய்தேன். என் கவலையெல்லாம் போயிற்று, என் மனேரதமும் கைகூடும் என்பதற் கையமில்லை யினி—

கண். அப்படியானு, அம்மா, நானும் ரொம்ப கஷ்டத்தி லிருக்கேன். அந்த மந்திரோபதேசம் எனக்கும் செய்துவிடு. உனக்கு ரொம்ப புண்ணிய முண்டு.

ம. அப்படியே செய்கிறேன். ஆனுல் அந்த ஒரு நாழிகைக்குள் ஏதாவது வாய் திறந்து ஒரு வார்த்தை பேசினுயோ, பிறகு மிகவும் கெடுதி நேரிடும் பத்திரம்.

கண். இல்லை இல்லை அப்படியே செய்யரேன்.

ம. ஆனுல் கேள். [அவள் காதில் ஏதோ ஓதுகிருள்.]
இந்தப் போர்வையினுல் உன் உடலை முற்றிலும் மறைத்துக் கொள்.—ஒரு நாழிகை வரை அதே தியானமாயிரு, ஒரு வார்த்தையும் பேசாதே !

[நன்ருக மூடிவிட்டு, தாசதேவன் காதில் ஏதோ ரகஸ்யம் சொல்லி விட்டு விரைந்து போகிருள்.]

**சந்திரஹரி, அசத்தியகீர்த்தி, ஈசநட்சத்திரன், கண்டகாலன் வருகிருர்கள்.**

க. [ஒரு புறமாக ஈச நட்சத்திரனுடன்] ஐயா, நட்சத்திரரே, உமக்கு ஒரு வார்த்தெ ரகஸ்யமா சொல்ரேன், ரெண்டு நாளெக்கு முன்னே என் சம்சாரம் ஆத்தெ விட்டு எங்கேயோ தொலைஞ்சி பூட்டாள். எனக்கோ ஒரு பெண்திக்கு வேண்டி யிருக்கு.—ஆனுலும்—நீங்க என்னமோ

வெலெ அதிகமா சொல்ரைகளே, இண்ணு யோசிக் கரேன்.

[இச் சமயம் தாசதேவன் சந்திரஹரியின் காதில் ஏதோ ஓதுகிருன்.]

ஈ. ஓய்! பிராம்மணரே, அதுக்கு ஒரு காசும் குறைக்க முடியாது.

க. சரி, ஆனல்.—அதோ நிற்கிருளே, அந்தம்மாள்தானே?

ஈ. ஆமாம்.

க. ஆனு, மொதல்லெயே அந்தம்மாளெ ஒரு வார்த்தெ கேட்டுவிடுவோம்.—அம்மா, எனக்கு வீட்லே பெண் திக்கில்லே. என் சம்சாரம் தப்பிப்போச்சி, என் சம்சாரத்துக்குப் பதிலா—வீட்லெ இருந்துண்டு, வீட்டு வேலெயெல்லாம் பாத்திண்டிருக்கணும், இது உனக்கு சம்மதிதானு சொல்லு?

ச. ஸ்வாமி, அதற்கு நான் உத்தரவாதம்.—பெண்பால்—சங்கோசப்படுகிருள் நேராக முதல் முதல் பேசுவதற்கு; நான் அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை. உம்முடைய வார்த்தைக்கு குறுக்கு இராது.

க. சரி, ஆனு,—இந்த ஒன்பதினயிரம் பொன்னையும் யாரிடம் கொடுக்கிறது?

ச. ஒன்பதினயிரமா? பதினயிரமல்லவோ சொன்னேன்?

ஈ. இல்லை இல்லை, சந்திரஹரி, ஒன்பதினயிரம்தான் நாம் கேட்டது.

ச. [ஒருபுறமாக ஈசநட்சத்திரனுடன்] தரகு எங்கே ஐயா போகிறது? இப்பொழுதே சொன்னேன். அப்புறம் உம்முடைய இஷ்டம்.

க. ஐயா, நட்சத்திரரே, அடிமைச் சீட்டு ஒன்னு எழுத வேண்டாமோ?

ஈ. அதொன்றும் அவசியமில்லை.—இந்த சந்திரஹரி, இதோ நிற்கும் தன் மனைவியை உமக்கு அடிமையாய் ஒன்பதி

ஞயிரம் பொன்னுக்கு விற்றுவிட்டதாகக் கூறினல் போதும். நாங்களிருவர் இருக்கிறேம் சாட்சியாக.

க. ஆஞ அப்படியே சொல்லச் சொல்லுங்க.

ச. அதெற்கென்ன ஸ்வாமி.—சூர்யசந்திரர்கள் அறிய, அஷ்டதிக்குப் பாலர்கள் அறிய, பூமாதேவி ஆகாயவாணி அறிய, திரிமூர்த்திகளறிய, நீங்கள் அனைவரும் அறிய, இதோ நிற்கும் என் மனைவியை, இப் பிராம்மணருக்கு ஒன்பதினுயிரம் பொன்னுக்கு அடிமையாக விற்றுவிட்டேன்.

ஈ. [ஒரு புறமாக] அப்பா, முனிவர் எண்ணம் நிறைவேறிவிட்டது. எப்படியாவது இவன் வாயினின்றும் ஒரு உண்மையை வரவழைத்து விட்டோமே!

ச. ஸ்வாமி, இனி தாமதமேன்? அந்த ஒன்பதினுயிரம் பொன்னையும் தாம் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஈ. இதோ, எங்கே ஐயா, அந்த பொன்?

க. அதோ, அந்தக் கடையில் வைச்சிருக்கேன். வாரும் தர்ரேன். [இருவரும் போகிருர்கள்.]

ச. அசத்யகீர்த்தி, அந்த பிராம்மணன் அந்தப் பொன்னை எடுத்துக்கொண்டு தனியாகத்தான் திரும்பிப் போவான், அவனறியாதபடி பின் தொடர்ந்து சமயம் பார்த்து பறித்துக்கொண்டு மறைந்துவிடு.

அ. அப்படியே. [போகிருன்.]

கண்டகால ஐயரும், ஈசநட்சத்திரனும் திரும்பி வருகிருர்கள்.

ச. ஸ்வாமி, பொன் சரியாக சேர்ந்துவிட்டதா?

ஈ. சேர்ந்துவிட்டது.

ச. இனி ஒன்றும் நான் உமக்கு பாக்கியில்லையே?

ஈ. ஒன்றுமில்லை.

ச. மறுபடியும் கேட்கமாட்டீர்களே?

ச. கேளேன்.

க. சந்திரஹரி, எனக்கு தேச காலமாறது. அந்த அம்மாளுக்கு ஏதாவது சொல்லவேண்டியதைச் சொல்லி அனுப்பிவிடு, எங்க ஆத்துக்கு போவணும்.

ச. ஸ்வாமி, இனி என் உத்தரவென்ன? தங்கள் சொத்து, தாங்கள் அழைத்துக்கொண்டு போங்கள்.—பெண்மணி! உன்னைவிட்டுப் பிரியவேண்டிய காலம் வந்துவிட்டதே என் செய்வேன்! உன்னை விட்டுப் பிரிந்து அரைக்ஷணமும் எப்படி உயிர் தரிப்பேன்! என் ராஜ்யமெல்லாம் போனதற்காக நான் துக்கப்படவில்லை; உன்னைவிட்டுப் பிரியவும் நேரிட்டதே! என் விதிவசம்!

[மிகவும் துக்கப்படுகிறான்.]

என்ன துக்கப்பட்டும் என்ன பிரயோஜனம்? விதியை விலக்கினவர் யார்? நீ விடைபெற்றுக்கொள். அந்தணர் காத்திருக்கின்றார்.

தா. அப்பா, நானு கூட அம்மாவோட போரேன்.

ச. மைந்தா மெச்சினேன் உன் புத்தியை! அப்படியே செய்.

க. ஐயா, இந்தப் பையன் ஏதுக்கு? ஏனையா, உன் ஆம்படையாளை விலைக்கு வாங்கினேனே யொழிய இந்தப் பையனையுமா விலைக்கு வாங்கினேன்? இவன் என்னத்துக்கு சோத்துக்குக் கேடா?

ச. ஸ்வாமி, அப்படியல்ல, தாயைவிட்டுச் சேயைப் பிரிக்கலாகாதென்று தர்ம சாத்திரங்கள் முறையிடுகின்றன. ஆகவே இவனையும் நீங்கள் அழைத்துக்கொண்டு போக வேண்டியது உம்முடைய கடமை; பசுவை வாங்கினால் அதன் கன்றிற்கும் தீனி போடவேண்டாமா?—இவனையும் அழைத்துக்கொண்டு போங்கள்.

க. சரி, அப்படியே ஆகட்டும்.

ச. மைந்தா, உங்களை நான் வந்து விடுவித்துக்கொண்டு போகும் வரையில் சுகமாய் ஐயர் வீட்டில் வாழ்ந்து கொண்டிரு. [அவன் காதில் ஏதோ ஓதுகிறான்.]

தா. அப்படியே அண்ணே.

க. உம்—வாருங்க போகலாம்.

[மூடியிருக்கும் கண்டிகாலியையும் தாச தேவனையும் அழைத்துக்கொண்டு போகிறார்.]

ஈ. சந்திரஹரி, என்னவென்றாலும் உன் மன உறுதியை நான் மெச்சவேண்டியதுதான். இவ்வளவு மனோதிடம் உனக்கெப்படி வந்தது என்று எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது!

ச. எல்லாம் வேளைக்குவரும் ஸ்வாமி! உலகவாழ்க்கை யென்பது அநித்தியம். மனைவி மக்கள் மற்றும் சுற்றத்தார் எல்லாம் சந்தையிற் கூட்டம்—கேளாதே வந்து கிளைகளாய்த் தோன்றி வாளா பொவரால் மாந்தர்கள்!—இதற்கெல்லாம் துக்கப்படலாமா? எல்லாம் ஈசன் திருவுளப்படி ஆகிறது! ஸ்வாமி, வாருங்கள் நாம் போவோம்.

[இருவரும் மற்றொரு புறமாகப் போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

## இரண்டாம் காட்சி

இடம்—தென்காசியில் கண்டகாலன் வீடு.

உடல் முழுதும் போர்வையால் மூடப்பட்ட கண்டிகாலியை அழைத்துக்கொண்டு கண்டகாலன் வருகிறான்.

தேவதாசன் பின்னால் வருகிறான்.

க. அடே, பையா, உங்கம்மா பேரென்ன?

தா. எங்கம்மா பேரா?—சேஷம்மா.

க. சேஷம்மா—நல்ல பேர்—ஆனா, நானு சேஷி இண்ணு கூப்பிடரேன்—அதென்ன சேஷி, நானு என்ன கேட்டாலும் வாயெ தொறக்கமாட்டேண்ரையே? இப்படி வாயெ மூடிண்டிருந்தா எப்படியாவும்?—நம்ப ஆத்தண்

டே வந்தூட்டம், இனிமேலாவது அந்த முக்காட்டெ—எடுத்தூடு,—உம் மூஞ்செத்தான் நான் கொஞ்சம் பார்க்கட்டுமே?—நீ பேசாப்போனா போவுது—

[அருகில் செல்கிருன், கண்டிகாலி ஒதுங்கி நிற்கிருள்.]

ஆ! அவ்வளவு கோபமா? எனக்கு அடிமையான பிறகு கோபமெல்லாம் ஒதவுமா!— கெடக்கட்டும்—இத்தெ அடக்கிற விதத்துலெ அடக்கரேன்! அந்த பட்டி முண்டெ போனபிறகு ரெண்டுநாளா மித்தம் பெருக்கலே —இந்தா, இந்த துடப்பத்தாலே முன்னெ இத்தெ நண்ணு வெளக்கி சுத்தம் பண்ணு.

[ஒரு துடப்பத்தைக் கொடுக்கிருன்.]

கண்டகாலி. [துடப்பத்தை எடுத்துக்கொண்டு முக்காட்டை நீக்கி] கேடு கெட்ட கிழமே! என்ன சொன்னெ என்னெ? நானு பட்டிமுண்டெ?—அறுபது முப்பதும் அடுக்கா ஆச்சுது! இன்னும் ஒரு பொம்மனாட்டி தொணையா வோணும்? ஒன்பதினாயிரம் பொன்னெ கொட்டிக்கொடுத்து ஒரு சின்ன பொண்ணெ வெலெக்கி வாங்கி வரவா பாத்தெ?

க. அடி, பட்டிமுண்டே! நீயா?—

கண்டகாலி. இன்னொரு தரம் பட்டிமுண்டெ இண்ணு சொல்லாதே! சொல்லாதே! சொல்லாதே!

[துடப்பத்தால் அடிக்கிருள்.]

க. இல்லேடி! இல்லேடி! ஐஐயோ!—மோசம் போனேனே! ஒன்பதினாயிரம் பொன்னும் போச்சே! தொடப்பக்கட்டெ அடி ஆச்சே!—வா நம்ப தேசத்து ராஜாவிடம் மொறயிடலாம்—

கண்டகாலி. ராஜாகிட்ட போயி எதுவானாலும் சொல்லு, எம் பேச்சு மாத்தரம் ஏதாவது எடுத்தையா? பத்திரம்!

க. இல்லெ இல்லெ! வா போவோம் சீக்கிரம். நம்மெ மோசம் பண்ணவா நம்ப பட்டணத்தெ விட்டு இன்னும் போயிருக்கமாட்டா! வா சீக்கிரம்!

[இருவரும் விரைந்து போகின்றனர்.]

தா. நல்ல அதுஷ்டம் நம்புளுக்கு! அவுங்க சண்டெ போடும் போது இந்த முடிச்சுங்ககாலு கீழே உழுந்துது, சின்ன முடிச்செ தூக்கிகினு அம்மா வரச்சொன்ன இடத்துக்கு போயி சேர்வோம். [ஓடிப் போகிறான்.]

காட்சி முடிகிறது.

## மூன்றும் காட்சி

இடம்—தென்காசியில் மற்றொருபுறம்.

ஈசநட்சத்திரனும் சந்திரஹரியும் வருகிறார்கள்.

ந. என்னடாப்பா, அது? ஆச்சரியமாயிருக்கிறது! எங்கே போயிருக்கும் அந்த மூட்டை? தலையின் கீழே வைத்துப் படுத்துக்கொண்டேனே—நீ ஏதாவது பார்த்தாயா?

ச. ஸ்வாமி, என்ன விளையாடுகிறீர்கள்? நானாவது உங்கள் மூட்டையையாவது பார்த்ததாவது? என்ன, என் தர கில் ஏதாவது குறைப்பேன் என்று இந்தக் கதை எடுத் தீர்களா?

ந. என்ன !—உன் தரகாவது?

ச. ஓஹோ! என்ன ஸ்வாமி, முதலுக்கே வழி வைக்கப் பார்க்கிறீர்களே. என் தரகு என்னவென்று கேட் கிறீர்கள்?

ந. ஏது தரகு, என்ன தரகு, உனக்கு நான் எதற்காகக் கொடுக்கவேண்டும்?

ச. சரிதான்! முழுப் பூசனிக்காயை சோற்றில் மறைக்கப் பார்க்கிறீர்களே! என் பெண்சாதியை விற்று உமக்கு ஒன்பதினாயிரம் பொன் சேர்ப்பித்தேனே, அதற்காகத் தக்கபடி தரகு கொடுப்பதாக என்னிடம் பன்முறை பிரமாணம் செய்துவிட்டு, இப்பொழுது ஒன்றும் ஞாபக மில்லாததுபோல் வேஷம் போடுகிறீர்களே !பிராம்மண னுகப் பிறந்து பொய் பேசலாமா? பொய் பேசும்

வாய்க்குப் புழுங்கலரிசியும் கிடைக்காது என்று பெரியோர்கள் கூறியிருக்கிறார்களே கேட்டதில்லையா ?

ச. இதென்னடாப்பா, முழுப்புரட்டா யிருக்கிறது!—நானா உனக்கு தரகு கொடுக்கவேணும் ?

ச. ஓஹோ ! வாங்கின விலைக்கு வந்துவிட்டாற்போ லிருக்கிறது. [சுற்றிப் பார்த்து விட்டு]
என்ன, குறியாகக் கொடுத்து விடுகிறீர்களா, பலவந்தப்படுத்தவேண்டுமா ?

ச. நானெங்கிருந்தடாப்பா கொடுப்பது ? என் கையில் ஒரு காசும் கிடையாதே !—இருந்த ஒன்பதினாயிரம் பொன்னும் எங்கேயோ போக்கடிந்து போச்சுது !

ச. ஓ ! இப்பொழுது தெரிகிறது, இதற்காகதான் அந்தக் கதையை முன்பே எடுத்தீர்களோ !—அதெல்லாம் போகட்டும், நான் ஒரு மார்க்கம் சொல்லுகிறேன் கேளும். உங்களை நான் இங்கே யாருக்காவது அடிமையாக விற்பது போல் விற்று எனக்குச் சேரவேண்டிய ஆயிரம் பொன்னையும் பெற்றுக்கொள்ளுகிறேன். பிறகு நீர் எப்படியாவது தப்பித்துக்கொண்டு ஊர் போய்ச் சேரும்—

ச. இதென்னடா விந்தையாயிருக்கிறது ! என்னையா அடிமையாகப் போகச் சொல்கிறாய் ? [நகைக்கிறான்.]

ச. நகைக்கமாட்டீர்கள், பிறகு ? உங்கள் கடனைத் தீர்க்கவும் வழி சொன்னேன், நீர் தப்பித்துக்கொள்ளவும் வழி சொன்னேனே !

ச. இதென்ன உனக்கு பயித்தியம் பிடித்து விட்டதா என்ன ?—அதோ, யாரோ வருகிறார்கள் அவர்களிடம் சொல்லுகிறேன்.

தூரத்தில் சில நகர் காவலாளிகள் வருகின்றனர்.

ச. சரி ஆனால்— [உரத்த சப்தமாய்]
அப்பா ! துரோகம் பண்ணாதேயடா, இந்த ஜன்மத்தி

வில்லா விட்டாலும் மறுஜன்மத்திலாவது கொடுத்துத் தீரவேண்டுமடா!—ஐயா! பெரிய மனுஷ்யர்களே! நீங்கள்தான் பஞ்சாயத்து சொல்லுங்கள். இந்த மனுஷ்யன் எனக்கு ஆயிரம் பொன் கடன் கொடுக்கவேண்டும். நாலு வருஷமாக ஆகட்டும் ஆகட்டும் என்று கெடு சொல்லிக் கொண்டிருந்தான். கடைசியாக பிராம்மண வேஷம் போட்டுக்கொண்டு எங்கள் ஊரை விட்டு ஓடிவந்து விட்டான்; இப்பொழுது தெய்வாதீனத்தால் இங்கு கண்டு பிடித்துக் கேட்டால் என்னை மறுபடியும் மோசம்செய்து விட்டு தப்பி ஓடப் பார்க்கிறான். நீங்கள்தான் சொல்லுங்களையா நியாயம்.

**முதல்-கா.** ஏனையா? கொடுக்க வேண்டிய கடனைக் கொடுத்து விடுகிறதற் கென்ன?

**ச.** என் தலை விதியா! நான் ஒரு காசும் கொடுக்கவேண்டியதில்லை ஐயா.

**மு-கா.** ஏனையா? கடன் கொடுக்கவேண்டியதில்லை என்கிறானே இந்த ஆள். அதை ரூபிப்பதற்கு ஏதாவது சீட்டு கீட்டு இருக்கிறதா?

**ச.** கைச்சீட்டு வாங்கிக்கொள்ளாமல் நம்பி கடன் கொடுத்தபடியால்தான் இப்படி என்னை ஏமாற்றப் பார்க்கிறான்—என் துர் அதிர்ஷ்டம்! நான் என்ன செய்வது?

**இ-கா.** அவன் கடன் கொடுக்கவேண்டு மென்பதற்கு சாட்சியாவது யாராவது இருக்கிறார்களா?

தூரத்தில் அசத்தியகீர்த்தி வருகிறான்.

**ச.** ஆ! அகதிக்கு ஆகாயமே துணை யென்று தென் காசிநாதன் என்பக்கில் இருக்கிறார்! அதோ எங்கள் தேசத்து ஆள் ஒருவர் வருகிறார் அவருக்குத் தெரியும்.

[அசத்தியகீர்த்தி அருகில் வர]

ஐயா, இப்படி கொஞ்சம் வாருங்கள்— இந்த ஆள் எனக்கு ஆயிரம் பொன் கொடுக்கவேண்டிய சமாசாரம்

உங்களுக்குத் தெரியாதா? நீங்களாவது சொல்லுங்கள்.

அ. ஆயிரத்து இருநூறு பொன்னல்லவோ கொடுக்கவேண்டு மென்று அன்றைத்தினம் கோயிலின் முன்பாக என்னிடம் ஒப்புக்கொண்டான்.

ச. ஆமாம், அதற்கப்புறம், இருநூறு பொன் கொடுத்து விட்டான். நான் பொய் பேசமாட்டேன், அயலார் சொத்து அரைக் காசும் எனக்கு அதிகம் வேண்டாம்.

அ. ஏன், இப்பொழுது அந்தக் கடனுக்கு என்ன சொல்லு கிறான்?

ச. கடனே கொடுக்கவேண்டியதில்லை என்று சாதிக்கிறான்!

அ. ஏண்டா பாபி! கொடுக்கவேண்டிய கடனை எந்தஜன்மத் திலாவது கொடுத்துத்தானே தீரவேண்டும்—குறியாக்க் கொடுத்துவிடு.

ஈ. ஐயா, இவனது வார்த்தையை நம்பாதீர்கள். இவன்,— இவனுடைய மந்திரி.

ச. சரிதான்—கேட்டீர்களா ஐயா இவன் சாதனையை?— இன்னும் கொஞ்சம் போனால் நான் ஒரு ராஜா என்று சொல்லுவான்போ லிருக்கிறது.

ஈ ஆமாமையா, இவன் ஒரு அரசன்தான்—

[ஜனங்கள் எல்லோரும் நகைக்கிறார்கள்.]

ச. கேட்டீர்களா ஐயா, நியாயத்தை!—இப்படி வாய் கூசாது பொய் பேசும் பாதகனை இந்த உலகத்தில் நீங்கள் எப் பொழுதாவது பார்த்திருக்கிறீர்களா?

மு-கா. அடே அப்பா! நான் சொல்வதைக் கேள் கொடுக்க வேண்டிய கடனை எப்படியாவது கொடுத்துவிடு—அடிமைப் பட்டாவது கொடுத்துவிடு—இல்லாவிட்டால் இந் நகரத்தை யாளும் ராஜா மிகவும் கொடியவர். கொடுக்க வேண்டிய கடனைச் செலுத்துகிற வரைக்கும் கடன்காரர் களை அண்ணுந்தாள் போட்டு வைப்பார்.

ஈ. ஐயோ! இது என்ன என் தலை விதியா? [துக்கிக்கிறான்.]

இ-கா. நாங்கள் சொல்லவேண்டியதைச் சொல்லி விட்டோம். பிறகு உன் பாடு. ஐயா, இப் பாதகனை ராஜாவிடம் அழைத்துச் செல்லும். உங்களுக்கு நியாயம் கிடைக்கும், போம். [நகர் காவலாளிகள் போகின்றனர்.]

ச. ஏனையா? இப்பொழுது என்ன சொல்லுகிறீர்கள்? ராஜாவிடம் வருகிறீர்களா அண்ணுந்தான் தண்டனைக்குட்பட? அல்லது என் சொற்படி நடக்கிறீர்களா?

ஈ. ஈசனே! ஈசனே!—இதென்ன கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட கதையாயிருக்கிறதே!—எப்படியாவது இப் பாதகர்கள் கையினின்றும் தப்பும் மார்க்கம் தேடவேண்டும்—அப்பா, நீ சொல்வதற்கு ஒப்புக்கொள்ளுகிறேன். யாருக்காவது என்னை அடிமையாக விற்று ஆயிரம் பொன்னைப் பெற்றுக்கொண்டு போ.

ச. இப்பொழுதுதான் வழிக்கு வந்தாற்போ லிருக்கிறது.—அசத்தியகீர்த்தி, இவரை வாயைப் பொத்தி கையையும் கட்டி ஜாக்கிரதையாக இங்கே வைத்துக்கொண் டிரு—நான் போய் சீக்கிரம் ஆயிரம் பொன் கொடுத்து அடிமையாக வாங்கத்தக்க ஆசாமியைப் பிடித்துக் கொண்டு வருகிறேன்.

அ. செய்யுங்கள்.

[ஈசநட்சத்திரன் கரத்தைப் பின்புறம் கட்டி வாயையும் துணியினுல் கட்டிவிடுகிறான்.]

சற்று தூரத்தில் பாஹு—வீரன் வருகிறான்.

பா. ஐயா, இங்கே, ஈசல் நட்சட்திரம்னு, யாரானு கீராங்களா? மொறவெ நாட்லெ இந்து வந்து?

ச. [அவனருகில் போய்] ஏண்டாப்பா, நான்தான் ஈசநட்சத்திரன், நீ யார்? என்ன சமாசாரம்?

பா. ஏயப்பா, நீதானு ஈசல் நட்சத்திரம்?

ச. ஆமாம்

பா. ஆனு, இந்தப் பக்கமா வாயப்பா, ஒரு ரவஸ்யம் சொல்லணும்— [இருவரும் ஒரு புறமாய்ப் போகிறார்கள்.]

என்னெ, நம்பசாமி, ரிசி கீராரே—செட்டிபாசி,—அவரு அனுப்பிச்சிகிருரு. அவரு ஏங்கிட்ட என்ஞு சென்ஞரு--நானு வந்து என் சிஸ்யன், ஈசல் நசல்நட்சத்திரனெ மொறவநாட்டு ராஜாவோட அனுப்பிச்சிகிறேன்— எப்படியாச்சிலும் அவனெ ஒரு நெசம் பேசும்படி செய்ய. அவன் என்ஞு கெதியாஞனெ தெரியலெ—அவங்க தெங்காசிலெ கீராங்க, நீயும் போயி பாரு-ஈசல் நட்சத்திரனுக்கு தொணெயா,-எப்படியாச்சிலும் அந்த மொறவ நாட்டு ராஜா வாயிலெ இந்து ஒரு நெசம் வரப்பண்ணேண்ஞு, ஓனக்கு ரெண்டாயிரம் பொன்னு தர்ரேன்—இப்பொ அச்சாரமா இந்த ஆயிரம் பொன்னெ வைச்சிக்கோ இண்ணு, ஏங்கிட்ட கொடுத்தனுப்பி கிராரு.

ச. சந்தோஷம்! நீ சரியான வேளையிலே வந்தாய்.—நான் என்னமோ என்னுலான கஷ்டம் பட்டுபார்த்தேன், அவன் என்னமோ நிஜம் பேசுகிறதாக் காணும். இப்பொழுது அவனை அடிமையாக விற்கலாம் என்று எண்ணி இருக்கிறேன். உன் கையிலிருக்கும் ஆயிரம் பொன்னையும் என்னிடம் கொடுத்துவிடு. அவன் எதிரில் உனக்கு அவனை அடிமையாக விற்றுவிடுகிறேன். பிறகு நீ எப்படியாவது ஒரு நிசத்தை சொல்லிவிடப்பா உன்னை அடிமைத் தனத்திலிருந்து நீக்கிவிடுகிறேன், என்று சொன்னுல் எப்படியும் அதற்கு உடன்படுவான்; நம்முடைய காரியம் கைகூடும்.

பா. அப்டியே சேயுங்கையா!

ச. அப்பா, இங்கே வா, [ஈச நட்சத்திரனருகில் போய்] அப்பா சந்திரஹரி, உன்னை அடிமையாக இந்த ஆள் ஆயிரம் பொன்னுக்கு வாங்கிக்கொள்வதாக ஒப்புக்கொண்டார்—எங்கே ஐயா ஆயிரம் பொன்?

பா. தொ! கீதையா! [பொன்னைக் கொடுக்கிருன்.]

ச. சரி, இனி இந்த ஆள் உன் அடிமை, அழைத்துக்கொண்டு போ அப்பா.

பா. ஏன் ஐயா, இந்த ஆளு, நானு செல்ர வேலெ யெல்லாம் செய்மா?

ச. அதற்கு சந்தேகமே வேண்டாம். நீ என்ன செய்யச் சொன்னாலும் செய்வார்.

பா. ஏயப்பா, இந்த ஆள் பேர் என்னயப்பா

ச. சந்திரஹரி.

பா. சந்துலெ அடியா? ஏயப்பா! ஒண்டிசண்டியாயிருந்தா என்னையே அப்பறம் சந்துலெ அடிக்கவா?—அந்த பேர் வாணயப்பா.

ச. உன் இஷ்டம், வேறு எந்த பெயர் வேண்டுமென்றாலும் வைத்துக்கொள்—உன் அடிமை.

பா. ஆனா, யப்பா, சந்தா சந்தா இண்ணு கூப்பிடரேன்—வாடாப்பா—சந்தா.

[பாஹுவீரன் ஈசநட்சத்திரனை அழைத்துக் கொண்டு ஒருபுறம் போகிறான்.]

ச. மந்திரி, அந்த ஒன்பதினாயிரம் பொன்னை எங்கே வைத்திருக்கிறாய்?

அ. அதெல்லாம் ஒருவருக்கும் தெரியாதபடி புதைத்து வைத்திருக்கிறேன். வாரும் போவோம், இடத்தைக் காட்டுகிறேன். [போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

# நான்காம் அங்கம்

## முதல் காட்சி

இடம்—தென் காசியில் ஓர் சோலை.

பாஹுவீரன் ஈச நட்சத்திரனை அழைத்துக்கொண்டு ஒருபுறமாக வருகிறான்.

சிஷ்டவாசி எதிர்புறமாக சற்று தூரத்தில் வருகிறார்.

பா. எண்டாயப்பா; இவ்வளவு ஒதெ வாங்கினும் ஒரு நெசம் சொல்லமாட்டெண்றெ இல்லா? தோ, எச

மான் வர்ராரு—நீ இங்கே தாம் கெட—அவர் கிட்ட செல்லி—நரம்பெ கயிட்டிடச் செல்ரே.

[சிஷ்டவாசி அருகிற் போய்]

சாமி, தண்டங்க!—நீங்க சென்னபடியே போயி, ஈசல் நட்சத்திரத்தெ பாத்து—நீங்க சென்னத்தெ சென்னே, அவரு என்ற சென்றருண்ணு—என்றலெ ஒண்ணும் முடியலேப்பா— உங் கையிலே இக்கிற ஆயிரம் பொன்னேயும் கொடுத்தூடு, இவனெ உனக்கு அடிமையா வித்தூடரேன், நீ எப்படியாச்சிலும் இவனெ நெசம் பேச வையி இண்ணு செல்லி, அந்த ஆயிரம் பொன்னேயும் வாங்கிகினு அவனெ ஏங்கிட்ட ஒப்பிச்சாரு— அவன் என்றண்ணுக்கா— ஒரெ புடிவாதமா கீரான்!— நயமா கேட்டுப் பாத்தேன்—கெஞ்சிப் பாத்தேன்—கோவிச்சிகினு பாத்தேன்—ஒதச்சிப் பாத்தேன்!—என்ன சேசாலும் ஒரு நெசம் பேசமாட்டேண்ரா!—மொதலுக்கே வயி வைக்கரா சாமி! நானு மொறவ நாட்டு ராசா அல்ல— நான்தான் ஈசல் நட்சத்திரம் இண்ரா அவன்! தோ, கையெ வாயெ கட்டி இஸ்தாந்து கீரேன்.

சி. எங்கே அவன்?

பா. தொ கீரான்—வாங்க காம்பிக்கரேன்—

[ஈசநட்சத்திரனருகில் அழைத்துக்கொண்டு போகிறுன்.]

சி. அடடே! என்னடா பெரிய தப்பிதம் செய்தாய்!—இவனல்லடா சந்திரஹரி! இவன்தான் ஈச நட்சத்திரன்!

[விரைவில் ஈச நட்சத்திரனுடைய கட்டுகளையெல்லாம் அவிழ்த்து விடுகிறுர்.]

ஈ. அப்பா!—ஸ்வாமி!—பிழைத்தேன்— நீர் இப்பொழுது வந்திராவிட்டால் இவன் கையில் நான் இறந்தே இருப்பேன்.

பா. அடடா! பாத்தீங்களா மோசத்தே! நான்தான் ஈசல் நட்சித்திரம் இண்ணு ஏச்சூட்டாம் என்னெ சாமி அவன்!

ச. ஸ்வாமி, ஏதோ நான் முன் ஜென்மத்தில் செய்த பாபம், சந்திரஹரியிடம் நான் பட்ட கஷ்டமெல்லாம் போதாதென்று, இந்தச் சண்டாளன் கையினின்றும் கஷ்டப் படவேண்டுமென்று என் தலை விதி யிருந்தது போலும்— எப்படி யிருந்தபோதிலும், உம்முடைய சபதத்தை நிறை வேற்றிவிட்டேன்.—அதுதான் ஒரு சந்தோஷம்.

சி. மிகவும் சந்தோஷம், எப்படி நிறைவேற்றினாய்?—சீக்கிரம் சொல்.

ச. அவன் கடைசியில் தன் மனைவியை விற்றபொழுது, திரி மூர்த்திகள் அறிய இதோ நிற்கும் என் மனைவியை அடிமையாக கண்டகால ஐயருக்கு விற்றுவிட்டேன் என்று கூறினான் உண்மையை.

சி. அடடா! வேறு என்னவோ சொல்லப்போகிறா யென்றல்லவோ இதற்குள் சந்தோஷப்பட்டு விட்டேன்!— அதிலும் அவன் நம்மை மோசம் செய்திருக்கிறான். அவன் விற்றது அவன் மனைவியை அல்ல—அந்த ஸ்திரீ, கண்டகாலன் மனைவி!

ச. கண்டகாலன் மனைவியா!

சி. ஆம்—நான் என் ஞானதிருஷ்டியினால் கண்டறிந்தேன். நீங்கள் அடிமையாக வாங்கத்தக்கவரை அழைத்துவரப் போயிருந்தபோது, மதிசந்திரை தனக்குப் பதிலாக சூதுசெய்து அங்குவந்த கண்டிகாலியை அங்கே நிற்கச் செய்து தன் போர்வையால் அவளை முற்றிலும் மூடி விட்டு தப்பித்துச் சென்றாள்.

ச. அடடா! என்ன மோசம்! என்ன மோசம்!

சி. போனது போகட்டும்.—இப்பொழுது மதிசந்திரையும் தாசதேவனும் இப் பட்டணத்தைவிட்டு தப்பி ஓடப் பார்க்கிறார்கள்—அவர்க ளிருக்குமிடம் உனக்குச் சொல் கிறேன். அவர்களை முன்பு பிடித்து வா, பிறகு மேல் நடக்கவேண்டியதைப் பார்ப்போம்.

[எல்லோரும் போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

## இரண்டாம் காட்சி

இடம்—ஓர் அடர்ந்த காடு.

மதிசந்திரையும் தாசதேவனும் வருகிறார்கள்.

ம. ஏண்டா பையா, இவ்வளவுதானா இருந்தது?

தா. இல்லெம்மா, இன்னொரு முடிச்சிகூட இருந்துது, அத்தெ எடுக்கரத்துக்குள்ள அந்த பாப்பாத்தி எம் பக்கம் திரும்பிப் பாத்தா, எங்கே கண்டு புடிச்சூடராளோ இண்ணு இத்தெ மாத்திரம் தூக்கிகினு வந்தூட்டேன்.

ம. மடப்பயலே! மறவ ஜாதியிலே பிறந்து, பயந்து வந்தூட்டேன் என்கிறாயே! வெட்கமில்லை? உங்கள் அப்பாவிற்குப் பிறகு நம்முடைய நாட்டை எப்படியடா ஆளப் போகிறாய்? இம்முறை உன்னை மன்னித்தேன். இனிமேல் இப்படி எப்பொழுதாவது சொன்னையோ, கன்னம் புளித்துப்போம்—பத்திரம்!

தா. இல்லெம்மா.

ம. [ஒரு புறம் பார்த்து] அடடா! அந்த எழுவெடுத்தப் பிராம்மணன் என்னமாகவோ நாம் இருக்கிற இடத்தைக் கண்டு பிடித்துக்கொண்டு இங்கும் வந்து தொடர்கிறான்போலிருக்கிறதே! காட்டில் தப்பி ஓட முடியாது.—நான் ஒரு யுக்தி செய்கிறேன். தாசதேவா! நீ பாம்புக்கடித்து இறந்ததுபோல் படுத்துக்கொள், நான் நீ இறந்ததாகப் புலம்புகிறேன். அந்த பிராம்மணன் இதைக் கண்டு போய் விடுவான். அவனருகில் வந்தால் மூச்சை அடக்கி மெல்ல ஸ்வாசம் விடு.

தா. அப்படியே அம்மா.

[இறந்ததுபோல் கீழே படுத்துக்கொள்கிறான்.]

நக்ஷத்திரன் வருகிறான்.

ம. அப்பா! மகனே! மகனே!—இந்த இளவயதில்—இந்த அருங்காட்டில் பாம்பு கடித்து—நீ மாளவேண்டுமென்று—பிரமன் உன் தலையில் வரைந்தானோ? கண்ணே! கண்ணே! ஒரு பாபமுமறியாத உன் உயிரை அப்பாபி

யமன் எப்படியடா மன மொப்பி கொண்டுபோனான்? இனி என் செய்வேனடா கண்மணி! கண்மணி!

ச. மதிசந்திரா, என்ன விசேஷம்? என்ன சமாசாரம்? பாம்பா கடித்து இறந்தான் உன் மைந்தன்? இவன் இங்கேன் வந்தான்?

ம. ஸ்வாமி! வாருங்கள்!—நான் என்ன சொல்லப் போகிறேன்? என் கதி யிப்படி ஆயிற்றே! நீங்கள் அந்த பிராம்மணருக்கு எங்களை அடிமையாக விற்றுப் போனபின், அந்தப் பிராம்மணன் என் மைந்தனை இளம்பிராயமுடையவன் என்றும் பாராமல் இவ் வருங் கானகத்தில் சமித்து கொண்டு வரும்படி அனுப்பினான். இங்கே இவன் வந்து சமித்து அறுத்துக்கொண்டிருந்தபொழுது அரவம் தீண்டி மாண்டதாக அசலாத்துப் பிள்ளைகள் வந்து சொல்ல உடனே நான் என் எஜமானன் உத்தரவு பெற்று பிள்ளைகள் சொன்னவழியில் தேடி வந்து, இறந்து கிடக்கும் என் மைந்தனைக் கண்டு உயிரற்ற அவன் உடல்மீது விழுந்து என் துயரம் ஆற்றாது புலம்புகிறேன்—கண்ணே! தாசதேவா!—பத்துமாதம் உன்னைச் சுமந்துபெற்ற தாய் புலம்புகிறாளே யென்றாவது ஒரு வார்த்தை உன் கனி வாய் திறந்து பேசமாட்டாயா? கண்மணி! இந்த அகோரமான காட்டில் அனாதையாய் நமது அன்னை புலம்புகிறாளே யென்றாவது ஒரு வார்த்தை தேறுதலாகச் சொல்லடா என் கண்மணி!

ச. [ஒரு புறமாக] என்ன பாசாங்கு செய்கிறாள்!—மதிசந்திரா, நடந்தது நடந்து விட்டது! இனி என்ன செய்யலாம்?—இப்பொழுது என்ன செய்யப்போகிறாய்?

ம. ஐயோ! எனக்கு இன்ன செய்வதென்று தோன்றவில்லையே! நடுக்கடலில் கப்பலுடைந்த மாலுமியைப்போல் தவிக்கின்றேனே! ஐயோ! எங்கள் அடிமைத்தனத்தினின்றும் விடுவிக்க என் பிராணநாதன் நாளை வந்து, என்னை எங்கே நமது மைந்தன் என்று கேட்பாராகில்—

அவருக்கு நான் என்னடா பதில் சொல்வேன் கண்ணே! பாலகா! பாலகா!—

ச. [ஒருபுறமாக] அடடா! என்ன துக்கம்! என்ன துக்கம்! உம்—இருக்கட்டும் மதிசந்திரா, இனி என்ன அழுதும் என்ன பிரயோஜனம்?—இறந்த மைந்தன் மறுபடியும் வரப் போகிறனே? நன்றாக இருட்டு முன் இறந்த உன் மைந்தனை சுடுகாட்டிற்குக் கொண்டுபோய் கொளுத்திவிடு.

ம. ஸ்வாமி, அப்படியே செய்கிறேன்.—கொளுத்தியபின் மறுபடியும் எந்த ஜன்மத்தில் காணப்போகிறேமென்று சற்று ஆறுதலாகப் பாலகனைக் கட்டியணைத்து அழுது விட்டு, ஒரு சுடுகாட்டிற்குக் கொண்டுபோய் கொளுத்தி விடுகிறேன்.

ச. சரிதான், அப்படியே செய், நான் வருகிறேன்.

[போகிறதுபோல் போய் மறைந்துக்கொள்கிறன்.]

ம. கண்ணே! கண்ணே! உன் மதிமுகத்தை மறுபடியும் எந்த ஜன்மத்திலடா இப்பாவி காணப்போகிறள்!—அப்பா, ஒழிந்தான் பிராம்மணன்! எழுந்திரு தாசதேவா!—

தா. [எழுந்து] மூச்செ அப்படியே அடிச்சிகினு இருந்தேம் பாத்தையா?

ம. நான் ஓயாமல் அழுதேன் பார்த்தாயா?

ச. நான் போகாமல் வந்தேன் பார்த்தீர்களா?—

[அருகில் வருகிறன்.]

அ. அடடே! படுத்துக்கொள்! படுத்துக்கொள்! பார்ப்பான் வந்து விட்டான் மறுபடியும்!

[தாசதேவன் விரைவில் படுத்துக்கொள்ள மறுபடியும் மதிசந்திரை புலம்புகிறள்.]

கண்ணே! கண்ணே! உன்னை சுடுகாட்டிற்குக் கொண்டு போக வேண்டிய காலம் வந்துவிட்டதே! அங்கே போகவும் எனக்கு வழி தெரியாதே!

ச. அதைக் கூறத்தான் வந்தேன்!—நீ இந்நாட்டிற்குப் புதியவளாயிற்று சுடுகாட்டுக்கு வழி தெரியாதே கஷ்டப்படுவாயே, காட்டலாம் என்று திரும்பி வந்தேன்.

ம. நிரம்ப சந்தோஷம்—

ச. புறப்படு இருட்டி விட்டது—நானும் பிணத்தைத் தூக்கவா?

ம. ஸ்வாமி! ஸ்வாமி! வேண்டாம் நான்தான் பாவி பிணத்தைத் தூக்கவேண்டும், பிராம்மணோத்தமரான தாங்கள் சவத்தைத் தீண்டலாகாது.—நானே தூக்கிக்கொண்டு வருகிறேன். நீர் முன்பு வழி காட்டிக்கொண்டு போம்.
[அப்படியே இருவரும் போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

—oo:o:oo—

## மூன்றாம் காட்சி

இடம்—தென் காசியில் சுடுகாடு.

சுடுகாட்டுப் புலையன்போல் வேடந்தரித்த சந்திரஹரி, மதிசந்திரை, தாசதேவன் வருகிறார்கள்.

ம. நாதா, இதுதான் நடந்த சமாசாரம், இந்த பிராம்மணன் கையினின்றும் தப்புவதற்கு இந்த யுக்தி செய்தேன், அவனை முட்டை பொறுக்கிக்கொண்டு வரும்படி அனுப்பியிருக்கிறேன். அவன் சீக்கிரம் திரும்பி வந்து விடுவான். பிறகு பிணத்தைக் கொளுத்தும்படி கேட்பானாயின் என்ன செய்வது? அதற்குத் தாம்தான் ஒரு யுக்தி சொல்லவேண்டும்.

ச. அதற்கு நான் ஒரு யுக்தி சொல்கிறேன் கேள். அப்படியே ஆகட்டும் என்று ஒப்புக்கொள். நீ மூட்டுவது போல் பாசாங்குசெய்து பிரலாபி, அக்குரலைக் கேட்டு வந்தவன்போல் நான் வந்து, பிணத்தைக் கொளுத்துவதற்குக் கொடுக்கவேண்டிய கட்டணம் கொடுத்தாலொழிய, கொளுத்தக்கூடாதென்று ஆட்சேபனை செய்

கிறேன். அப்பொழுது உன் கையில் ஒரு காசும் இல்லையென்று சொல், பிறகு உன் எஜமானனிடம் போய் பெற்றுக்கொண்டு வாவென்று அனுப்புகிறேன், பிறகு பார்த்துக்கொள்ளலாம்.

ம. அப்படியே ஆகட்டும்.

ச. இதோ பார்,—உன் கையில் அரைக்காசும் கிடையாது என்ருல், உன் கழுத்தில் தாலி இருக்கிறதே என்பான், ஆகவே அதைக் கழற்றி என்னிடம் கொடுத்துவிடு.

ம. ஆம் ஆம் உண்மைதான், அதை மறந்தேன்.

[அப்படியே செய்கிருள்.]

நாதா, முன்பே கேட்க மறந்தேன், தாம் ஏன் இந்த வேஷத்தில் இருக்கிறீர்? முதலில் உம்மை அடையாளம் கண்டு பிடிப்பதே கஷ்டமாயிருந்தது.

ம. கண்டகாலனும் ஈசநட்சத்திரனும் தங்களை நான் மோசம் செய்ததாக இந்த நாட்டரசனிடம் சென்று முறையிட்டாற்போலிருக்கிறது, அதற்காக எப்படியாவது என்னைப் பிடிக்க வேண்டுமென்று இந்நாட்டரசன் தண்டோரா போட்டிருக்கிருன்; அவன் சேவகர்கள் எங்கும் எனக்காகத் தேடுகிருர்கள். ஆகவே, இந்த வேஷம் பூண்டு இங்கு மறைந்திருக்கிறேன்—அதோ! தூரத்தில் பிராம்மணன் எரி முட்டையைத் தூக்கிக்கொண்டு வருகிருன்—படுத்துக்கொள்ளடா பையா! ஒன்றும் பயப்படாதே.

தா. நான் பயப்படலெ அண்ணு.

[பிணம்போல் படுத்துக்கொள்ளுகிருன்.]

ச. நீ அழ ஆரம்பி—நான் வருகிறேன். [விரைந்து போகிருன்.]

ம. ஹா! கண்ணே! கண்ணே! தாசதேவா! இனி எந்த ஜன்மத்தில் காணப்போகிறேனடா உன்னை! [அழுகிருள்.]

ஈசநட்சத்திரன் எரி முட்டையைத் தூக்கிக்கொண்டு வருகிருன்.

ஈ. அப்பா! [கீழே போடுகிருன்.]

[ஒரு புறமாக] என் தலை விதியா இது! ஆயினும் இன்னும் எவ்வளவு தூரம்தான் பாசாங்கு செய்கிறார்களோ பார்ப்போம்—மதிசந்திரா, இனி புலம்பி என்ன பிரயோஜனம்? எவ்வளவு புலம்பினாலும் ஏதாவது பயன்படப் போகிறதா? மாண்டவன் மீண்டும் வரப்போகிறானா? இருட்டி விட்டது, ஆகவே சீக்கிரம் உன் மைந்தனை தகனம் செய்து விடு.

ம. ஐயா! ஸ்வாமி! நான் எழுந்திருக்கவும் சக்தியற்றவளா யிருக்கிறேன், இந்த முட்டையை யெல்லாம் நீரே அடுக்கி விடும்—

ச. அது கூடவா நான் செய்யவேண்டும்?—செய்கிறேனம்மா.

[அப்படியே செய்து]

இனி என்ன செய்கிறாளோ பார்ப்போம்—சீக்கிரம் உன் மைந்தனை இதன்மீது வளர்த்தி, கொள்ளி வைத்துவிடு.

ம. அப்படியே செய்கிறேன் ஐயா.

[தாசதேவனை அதன்மீது வளர்த்துகிறாள்.]

ஹா! பிராணநாதா! பிராணநாதா! [உரக்க]

இந்த சமயத்தில் எனக்குத் தேறுதலாக ஒரு வார்த்தை யாவது சொல்ல என் அருகில் இல்லாமலிருக்கிறீர்களே! என் செய்வேன்! என் செய்வேன்!—

சந்திரஹரி வேகமாய் வருகிறான்.

ச. ஆ! யார், அது? நடுராத்திரியில் என் உத்தரவில்லாமல் இந்த மயானத்துள் புகுந்தது மன்றி, இங்கே அழுதுகொண் டிருப்பது?

ம. ஐயா! நான் அநாதையான ஸ்திரீ! என் பாலகன் பாம்பு கடித்திறக்க, அவனை தகனஞ் செய்கிறேன், என்னை மன்னிக்கவேண்டும்.

ச. நீ என் உத்தரவில்லாமல் இங்கே வந்ததே தவறு, ஆயினும் அதை மன்னித்து விட்டேன். இப்பொழுது எனக்குச் சேரவேண்டிய வாய்க்கரிசி முழுந்துண்டும்,

என் எஜமானனுக்குச் சேரவேண்டிய படிக்காசும் கொடுத்துவிட்டு உன் மைந்தனை தகனம் செய்வாய்.

ம. ஐயோ! அநாதையான நான் இவைகளை எங்கிருந்து உமக்குக் கொடுக்கக்கூடும்? ஐயா, ஜீவகாருண்யத்தைக் கருதி, இவைகளை மன்னித்து, என் மைந்தனை தகனம் செய்ய உத்தரவளியும், உமக்கு மிகவும் புண்யமுண்டு.

ச. அதெல்லாம் முடியாது—அவைகளை யெல்லாம் கொடுக்காவிட்டால் இங்கே உன் மைந்தனை தகனம் செய்ய உத்தரவு கொடுக்கமாட்டேன். எடுத்துக்கொண்டு போ, வேறே எங்கேயாவது.

ம. சரி, என்ன செய்வது! அப்படியே செய்கிறேன், கோபித்துக் கொள்ளாதீர் ஐயா என்மீது.

[தாசதேவனை எடுக்கப் போகிறாள்.]

ச. வேண்டாமம்மா, பொறுங்கள். நான் எங்கே யாவது யாசித்து வாய்க்கரிசியும் முழுந்துண்டும் கொண்டு வந்து தருகிறேன். காஷ்டத்தில் வைத்தபின் பிணத்தை எடுக்கலாமா?—கொஞ்சம் பொறுங்கள். [போகிறான்.]

ம. பார்த்தீர்களா, அசாத்தியப் பிராம்மணனா யிருக்கிறான். நம்மை விடமாட்டான்போ லிருக்கிறது.

தா. [எழுந்துட்கார்ந்து] அப்பா, அந்தப் பாப்பான் எப்படியாவது என்னெ கொளுத்தூடணும் இண்ணு பாக்கரான் அப்பா!

ச. அதெல்லாம் பயப்படாதே பையா; நானிருக்கிறேன், இவன் கண்ணில் மண்ணைப் போடுகிறேன்—நீ மாத்திரம், இன்னும் கொஞ்சம் அப்படியே செத்தவனைப்போல் இரு.—படுத்துக்கொள்! படுத்துக்கொள்! அதோ வருகிறான்.

[தாசதேவன் காஷ்டத்தின்மேல் மறுபடியும் படுத்துக்கொள்ள, மதிசந்திரை புலம்புகிறாள்.]

நக்ஷத்திரன் மறுபடியும் வருகிறான்.

ந. மதிசந்திரா, இதோ வாய்க்கரிசியும் முழந்துண்டும் கொண்டு வந்தேன். இதை வெட்டியானிடம் கொடுத்து விடு.

ம. நீங்களே கொஞ்சம் தயவுசெய்து கொடுத்துவிடுங்கள்.

ந. அப்படியே! [கொடுக்கிறான்.]

ச. [அவைகளைப் பெற்றுக்கொண்டு] சரி, படிக்காசு எங்கே?

ந. அது அகப்படவில்லை.

ச. ஆனால், இச்சுடுகாட்டில் தகனம் செய்யக்கூடாது!—ஏ! பெண்பிள்ளை! உன் பிள்ளையின் பிணத்தை எடுத்துக் கொண்டு போ—வாய்க்கரிசி முழந்துண்டு இல்லாவிட்டாலும் நான் ஒரு வேளை மன்னித்தாலும் மன்னிப்பேன். என் எஜமானனுக்குச் சேரவேண்டிய படிக்காசை மாத்திரம் நான் மன்னிக்கமாட்டேன். என் எஜமானனுக்கு நான் துரோகம் செய்யமாட்டேன்! அது அவருக்குச் சேரவேண்டியது.

ம. ஐயா, என் கையில் ஒரு காசும் இல்லையே நான் என்ன செய்வது?

ச. ஆனால், உன் பிணத்தை நீ எடுத்துக்கொண்டு போகவேண்டியதுதான், இங்கே சுட விடமாட்டேன்.

ம. ஸ்வாமி, இனி நான் என்ன செய்வது?

ந. உன்னிடம் நகை ஏதாவது இருக்கிறதா?

ம. ஒன்றுமில்லையே ஸ்வாமி.

ந. உன் கழுத்தில் மங்கலியம் இருந்ததே அது எங்கே?

ம. அதை என்னை அடிமைகொண்ட பிராம்மணன் பிடுங்கிக் கொண்டான் அடிமைக்கு நகை ஒன்றுவென்று, நான் என்ன செய்வது?

ந. கொஞ்சம் முன்பாக நான் பார்த்தாற்போலிருந்ததே?

ம. உங்கள் கண் நன்றாய்த் தெரியவில்லை போலும்.

ச. ஏ! பெண்பிள்ளை! இங்கே நின்றுகொண்டு உன் கதையை கேட்டுக்கொண்டிருக்க சாவகாசமில்லை எனக்கு; எடுத்துக்கொண்டு போகிறாயா இல்லையா உன் பிள்ளையின் பிணத்தை?—மாட்டாய்?—எவ்வளவு சொல்லியும் கேட்காவிட்டால் உன் பாடு பிறகு!

[தாசதேவன் உடலை உதைப்பதுபோல் உதைக்க தாசதேவன் தானாக உருண்டு கீழே விழுகிறான்.]

ம. ஆ! ஆ! பாவி! பாவி! பிணத்தை உதைத்தாயே!

ச. மதிசந்திரா, இன்னும் உயிர் இருக்கிறாற்போ லிருக்கிறதே!—தானாக உருண்டான்போலிருக்கிறதே.—

ம. என்ன ஸ்வாமி!—விளையாட இதுவா சமயம்? இறந்த பிணம் மறுபடியும் உயிர் பெறுமா?

ச. எனக்கு என்னமோ சந்தேகமா யிருக்கிறது.

[அருகிற்போய்ப் பார்க்க தாசதேவன் மூச்சை யடக்கிக்கொண்டு கிடக்கிறான்.]

ம. ஸ்வாமி, பிராம்மணனாய்ப் பிறந்து சவத்தைத் தீண்டாதீர்கள்—அப்பா, வெட்டியானே, எனக்கு நீதான் ஏதாவது வழி சொல், நான் இப்பொழுது என்ன செய்வதென்று.

ச. ஆனால் நான் ஒரு யுக்தி சொல்லுகிறேன் கேள்—நீ உடனே போய், யாருக்கு அடிமையாயிருக்கிறாயோ அவரிடமாவது வேறு யாரிடமாவது படிக்காசு யாசித்து வா—நான் உனக்காக இங்கே காத்திருக்கிறேன் அது வரையில்.

ம. அப்படியாவது செய்கிறேன். [புறப்படுகிறாள்.]

ச. [ஒரு புறமாக சந்திரஹரியிடம்] அப்பா, வெட்டியான், நாங்கள் திரும்பி வருகிறவரையில் இந்தப் பிணத்தை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்.

[மதிசந்திரையுடன் போகிறான்.]

ச. தூரம் போய் விட்டார்கள்!—அடே பையா, இந்த பிராம்மணன் ஏதோ சந்தேகங் கொண்டிருக்கிறான் அவன் வருமுன் நீ ஓடிப்போய் விடு.

தா [காஷ்டத்தினின்றும் எழுந்து] அப்பா, நான் செத்தா போலவே பாசாங்கு போடலே?

ச. நன்றாய்ச் செய்தாய்! இப்பொழுது தான் என் மகன் நீ!— [அவனைக் கட்டியணைத்து முத்தமிடுகிறான்.] இப்பொழுது இங்கு நில்லாதே ஓடிப் போய்விடு.

[தாசதேவன் ஓடிப்போகிறான்.]

என்னை இந்த வேஷத்தில் இந்த பிராம்மணன் கண்டு பிடிக்க முடியவில்லை. இதுதான் சரியான வேஷம்! இவர்கள் வந்தவுடன் எப்படியாவது என் மனைவியைத் தப்பித்துக்கொண்டு போகும் மார்க்கம் தேடவேண்டும்.

காட்சி முடிகிறது.

# ஐந்தாம் அங்கம்

## முதல் காட்சி

இடம்—ஓர் வெளி நிலம்.

சிஷ்டவாசி யோசித்தவண்ணம் வருகிறார்.

சி. என்ன சங்கடமாய் முடிந்தது! என்ன யோசித்துப் பார்த்தாலும் நான் கூறிய சபதத்தில் ஜெயம் பெறுவதற்கு வழி தோன்றவில்லை!—என்னுடைய தபசில் பாதி அப் பரம பாதகனுக்குக் கொடுத்துத்தான் தீரவேண்டும் போலிருக்கிறதே.—ஆயினும் ஒரு கடைசி பிரயத்னம் செய்து பார்ப்போம்.—இப்பொழுது இவர்கள் என்ன ஸ்திதியிலிருக்கிறார்களென்று நமது ஞானதிருஷ்டியால் பார்ப்போம்— [யோசிக்கிறார்.]

சந்திரஹரி தென்காசியில் சுடுகாட்டுப் புலையன் வேடம் பூண்டிருக்கிறான்.— மதிசந்திரை— அடடா! தென்காசி அரசன் குழந்தையைத் திருடிக்கொண்டு போய் அதன் நகைகளை யெல்லாம் கவர்கிறாள்!— அடடா! அதனைக் கொல்லப்பார்க்கிறாள் பாபி! துரோகி! சண்டாளி!— அம்மட்டும் நகர் காவலாளிகள் விரைந்தோடி வந்து அதைத் தடுத்து, சிசுவைக் காப்பாற்றுகின்றனர்!— அப்பா! பரம சண்டாளி!—அவளை அரசனிடம் இழுத்துச் செல்கின்றனர்.— ஆ! எனக்கொரு யோசனை தோன்றுகிறது—அரசன் இவளுக்கு எப்படியும் சிரசாக்கினை விதிப்பான்—நாம் உடனே அங்கு சென்று நமது தபோபலத்தால், அவளைக் கொல்லவேண்டும் என்கிற அரசனது ஆக்கினையை நம்மிடம் கொடுக்கச் செய்து, இப்பாதகியைக் கொல்லும்படியாக இவளை ஸ்மசானத்து வெட்டியாளு யிருக்கும் சந்திரஹரி எதிர் அழைத்துச் செல்லுகிறேன். அந்த நிலையிலாவது ஒரு உண்மை பேசுகிறானா பார்ப்போம். அதிலும் அவன் மனம் மாறு விட்டால் நான் தோற்றவனே யென்று ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். ஆம்! இதுதான் சரியான யோசனை!
[விரைந்து போகிறார்.]

காட்சி முடிகிறது.

## இரண்டாம் காட்சி

இடம்—தென்காசிச் சுடுகாடு. காலம்—நள்ளிருள்.

சந்திரஹரி வெட்டியான் வேஷத்தில் மெல்ல உலாவிக்கொண்டிருக்கிறான்.

ச. என்ன ஆச்சரியம்! சுடுகாட்டுப் புலையனா யிருப்பதென்றால் மிகவும் கஷ்டமான காரியம் என்று நினைத்திருந்தேன். இதிலும் இவ்வளவு சவுக்கிய மிருக்கிறதென்று இப்பொழுதுதான் கண்டேன். அமாவாசை கருக்கிருட்டா யிருந்தபோதிலும் ஆங்காங்கு சவங்கள் எரிவதனால்

வெளிச்ச மிருக்கிறது. ஆங்காங்கு எரிந்துகொண்டிருக்கும் இவைகளைப் பார்க்கும்பொழுது, நமது ஊரில் ஆடி மாசத்தில் பிடாரிக்குப் பொங்கல் போடுவார்களே அந்த ஞாபகம் வருகிற தெனக்கு!—அடடா! என்ன ஆச்சரியம் மதிசந்திரையை இரண்டு காவலாளிகள் விலங்கிற் பூட்டி அழைத்துக்கொண்டு வருகிறார்கள்! ஆ! பழய ஆசாமி சிஷ்டவாசியும் கூட வருகிறார்! ஏதோ விசேஷம் நடந்திருக்கிறது!— நாம் ஜாக்கிரதையா யிருக்கவேண்டும்.

விலங்கிற் பூட்டப்பட்ட மதிசந்திரையை அழைத்துக்கொண்டு
இரண்டு சேவகர்கள் வருகின்றனர்;
பின்னால் சிஷ்டவாசி வருகிறார்.

சி. சேவகர்களே, இதோ இருக்கும் வெட்டியானிடம் கைதியை ஒப்பித்துவிட்டு, அரசருடைய கட்டளையையும் கூறிவிட்டு நீங்கள் போங்கள்.

மு-சே. யாரடா அது வெட்டியான்?—இந்தா, இந்தப் பெண்பிள்ளை அரசருடைய கைக் குழந்தையைக் கொல்ல முயன்றதற்காக அரசரால் சிரசாக்கினை யடையும்படி தண்டிக்கப்பட்டாள். இதோ அரசருடைய மோதிரம்— இக் கட்டளையை உடனே நிறைவேற்றுவாய் நீ.

இ-சே. இதோ வாள்—ஆக்கினையை நிறைவேற்றியபின், அறிகுறியுடன் அரசர் அரண்மனைக்கு நாளை காலை வந்துசேர்.

[கைதியையும் வாளையும் ஒப்புவிக்கின்றனர்.]

இருவரும். நாங்கள் வருகிறோம் ஸ்வாமி.

சி. வாருங்கள். [சேவகர்கள் போகின்றனர்.]

சந்திரஹரி!— உன் துர்க் குணங்களும் பிடிவாதமும் உன்னை என்ன கதிக்குக் கொண்டுவந்து விட்டது பார்த்தனையா? அரசனாய் ஆண்டுகொண் டிருந்தவன் சுடுகாட்டு வெட்டியான் வேஷம் பூணும்படி நேர்ந்ததல்லவா? அன்றியும் உன் சொந்த மனைவியை உன் கையால் கொல்லும்படியான ஸ்திதிக்கு கொண்டுவந்து விட்

டதா.—இப்பொழுதாவது நான் சொல்வதைக் கேள். ஒரு உண்மையைப் பேசிவிடு, உன்னை இக் கஷ்டங்களி னின்றும் எல்லாம் நீக்கி, நீ முன்பிருந்த ஸ்திதியில் கொண்டுபோய்ச் சேர்க்கிறேன்—என்ன சொல்லுகிறாய் ?

ச. ஏ !—ஆண்டெ !—தென்னாதீது ? என்னென்னமோ சங் கீதி எல்லாம் செல்லிகினி போரையெ ? நீ யாரு ஆண்டே ?

சி. அடே! சந்திரஹரி! எல்லோரையும் ஏமாற்றியது போல் என்னையும் ஏமாற்றலாம் என்று எண்ணுகிறாயா என்ன ? அந்தக் கதையெல்லாம் என்னிடம் உதவாது. நீதான் சந்திரஹரி யென்று நன்றாய் அறிவேன்.

ச. ஏ ! ஆண்டே !—அது யார் ஆண்டே சந்துலேஅடி ?

சி. அடே! சந்திரஹரி! என்னவென்றாலும் உன் புத்தி யை மெச்சவேண்டியதுதான் நான். இந்த வேஷம் போட்டதுமன்றி அதற்குத் தக்க குரலும் பேச்சும் எங்கு கற்றாய் ?

ச. என்னு ஆண்டெ ! என்னெ வேசம் போட்ரென் இண்ணு செல்ரையே ! அப்பாலெ எங்க்கு கோவம் வரும் !

சி. ஏண்டாப்பா ! நீ சந்திரஹரியல்ல ?

ச. எம்மவ !—சந்துலே அடி யாராண்டெ அது ?

சி. ஆனால்—உன் பெயர் என்ன ?

ச. ஏம்பெரு—பீர்வாவு.

சி. உம் !—இருக்கட்டும்—இந்த ஸ்திரீ யார் தெரியுமா ?

ச. எங்கம்மா தாயே, யாரம்மா நீ ?

சி. அடே !—சந்திரஹரி !—இது உன் பெண்சாதி யல்லவா?

ச. ஆண்டெ ! நீ என்ன சென்னாலும் செல்லு, இந்த மாதிரி பேசனேண்ணு ஏங்கு நொம்ப கோவம் வரும் !—அச லாம் பொன்சாரியெ நம்பொ பொன்சாரி இண்ணு செல் லலாமா ? நொம்ப பாவமல்லா அது ? ஏன் ஆண்டெ ! பாப்பார ஆண்டெயா பொறந்து இப்படி பொய் பேசரெ ?

சி நானா பொய் பேசுகிறேன் ?

ச. பின்னெ என்னுவாம் ?

சி. [தனக்குள்] என்ன இது? ஒரு வேளை நாம் தவருக எண்ணிஞேமோ? இவன் பேசுகிற உறுதியைப் பார்த் தால் எனக்கே சந்தேகமாயிருக்கிறது? [சற்று தியானித்து] சீச்சீ! நம்மையே என்ன மயக்கிவிட்டான்! அடே! சந் திரஹரி! நீ என்ன சொன்னுலும் சொல் என் ஞான திர்ஷ்டியால் எல்லா உண்மையையும் அறிந்துவிட்டேன். இனி உன்ஞல் என்னை ஏமாற்ற முடியாது. உன்னைக் கடைசி முறை கேட்கிறேன், என் சொற்படி கேட்கிரு யா? அல்லது உன் விதிப்படி உன் பெண்சாதியின் தலை யை நீயே வெட்டுகிருயா? இதுவரையிற் செய்த பாப மெல்லாம் போதும். இந்தக் கடைசி பாவமும் வேண் டாம், நான் சொல்லுகிறபடி கேள். ஒரு உண்மையைப் பேசிவிடு. உங்களை இக் கஷ்டங்களினின்றும் நீக்கி முன்பிருந்த பதவியில் கொண்டுபோய்ச் சேர்க்கிறேன் என் தபோபலத்தால்.—என் வார்த்தையை நம்பு. எனக் கந்த சக்தி யுண்டு—உன்னை முன்போல் அரசனுக்கு கிறேன்.

ச. த்ரியேப்பா! என்னெ ராசாவாக்கி உடுவையோ ஆண்டெ?

சி. ஆக்குகிறேன் பார்.

ச. தோ பாக்கலாம்.—முன்னெ, இந்தம்மா—வெலங்கெ— நீக்கி உடு பாக்கலாம்.

சி. இதோ பார்! [மதிசந்திரையின் விலங்கைக் கையால் தொட அது கழன்று கீழே விழுந்துவிடு கிறது.]

ச. டேயப்பா! வாஸ்தவம்தான்!—ஆண்டெ! இவ்வளோ பெலம் இருக்குதே, இந்த ராசாகிட்ட இந்து ஏன் தப் பிச்சிக்கலெ நீ ?

சி. நான் ஏன் தப்பித்துக்கொள்ளவேண்டும் ?

ச. ஆண்டெ! எனக்கு நொம்ப வருத்தமாதான் கீது! நல்ல பாப்பார ஜாதியிலெ பொறந்து, கொயந்தையெ—அது வும் ராசா கொயந்தையெ—கொல்லணும் இண்ணு உனக் கு புத்தி கொடுத்துதெ ஆண்டே! பெரியவங்க செல்ரது

சரிதான் ! கெட்டுப்போவ காலம் வந்தா, புத்தி எல்லாம் கெட்டுபூடும்—

சி. என்னுடாப்பா அது ! என்ன கதை பேசுகிறுய் ?

ச. நானு கதெ பேசரேன் ! 'இப்டி செய்யணும், இப்டி ஆப்டுகணும், இப்டி எங் கையாலெ சாவணும் இண்ணு ஒன் தலேயிலெ எய்தனுரெ, அந்த புர்மாவெ கேட்டுப்பாரு.

சி. என்னடாப்பா இது ? கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட கதையா யிருக்கிறது ! என்னேயா கொல்லப் போகிறுய் ? நான் என்ன செய்தேன் ?

ச. என்ன செய்சையா ? ஏன் ராசா புள்ளயெ கொல்லப் பாத்தெ !

சி. நானு கொல்லப் பார்த்தேன் !—என்னுடாப்பா இது !

ச. அதெல்லாம் எனக்கு தெரியாது, ராசா உத்தரவு வந்திருக்குது உன் தலேயெ வெட்டிபூடணும் இண்ணு—தாப்பாரு—வாளுகூட அனுப்பிச்சிக்காரு !— தலேயெ குனிஞ்சிகொ ஒரே வெட்டா வெட்டிப்பூட்ரேன் ! ஒரு நிமிசம்—அவ்வளவுதான்—அப்பறம் ஒண்ணு மில்லெ,—நாயி ஆச்சி—என்னு குனியரையா இல்லெயா ?

சி. நானு குனியவேண்டும் ?

ம. இந்தப் பாப்பானுலேதான் அல்லாம் வந்துது !

[குடுமியைப் பிடித்து வணங்கச் செய்கிருள்.]

வெட்டு ஒரே வெட்டா ?

ச. சிஷ்டவாசி ! இப்பொழுது என்ன சொல்லுகிறீர் ?

[வாளே விரைவில் ஓங்குகிருன் ; கல் மழை பொழிகிறது.]

சி. மித்ரவசு ! மித்ரவசு ! நீரே வென்றீர் ! நீரே வென்றீர் !

[ஆகாயத்தில் அசரீரி ! பொறு ! பொறு ! பாதகா ! பரமபாதகா !]

பரமசிவம் ஆகாயத்தில் தோன்றுகிருர்.
யமதர்மனும், மித்ரவசுவும் வருகிருர்கள்.

மி. சிஷ்டவாசி ! இப்பொழுது என்ன சொல்லுகிறீர் ?

சி. மித்ரவசு, அப்பொழுதே நான் தோற்றதாக ஒப்புக் கொண்டேனே !

ப-சி. அடே! பாதகா! பரமபாதகா! பாதகரிலும் பாதகா! என்னவென்றாலும் உன் மனோதிடத்தை மாத்திரம் மெச்சவேண்டியதுதான்!—யமதர்மனே! இப் பரம சண்டாளனுக்கு என்ன தண்டனை விதிக்கலாம் சொல்.

ய. பரமசிவம்! அடியேனுடைய வேண்டுகோள் ஒன்று. தாங்கள் அறியாதது இவ் வண்ட சராசரங்களில் ஒன்றுமில்லை, தமக் கிஷ்டமானபடி தண்டிக்கலாம். ஆயினும் ஒன்று மாத்திரம் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ப-சி. என்ன அது?

ய. தாங்கள் இப் பாதகனுக்கு என்ன தண்டனை வேண்டுமென்றாலும் விதியுங்கள். என் உலகத்திற்கு மாத்திரம் அனுப்பாதீர்கள்.—இவன் அங்கு வந்து சேர்வானாயின் அங்கிருக்கும் மஹா பாபிகளையும் கெடுத்து விடுவான்!

ப-சி. யமதர்மனே, நீ சொல்வதும் உண்மையே!—ஆகவே சந்திரஹரி! இதுவே உனக்கு நாம் கொடுக்கும் தண்டனையாகும். இப்பூ மண்டலத்திலே கலியுக புருஷனாயிருந்து கலிகாலத்தில் நடக்கவேண்டிய கிர்த்தியங்களை யெல்லாம் சரியாக நடத்திக்கொண்டிரு. கலியுக முடிவில்தான் உனக்கு விமோசன முண்டாகும்!

ச. பரமசிவம்! தங்கள் சித்தம்! [தோற்றக் காட்சி]

காட்சி முடிகிறது.

நாடகம் முற்றியது.

Printed by Dowden & Co., at the "Peerless Press," Madras.